முரசொலி
ஆசிரியர்: மு. கருணாநிதி
2 அணா
முரசு 1 | சென்னை 15 — 10 — 54 வெள்ளி | ஒலி 29

கழகத் தோழர்கட்கு [2]

# குடும்பத்தின் கொலுமண்டபம் - கொள்கை விளக்கும் மணிமண்டபம் அமைப்போம் வாரீர்!

கழகக் கட்டிடங்கள் எழுப்பிட வேண்டுமென்று தோழர்கட்கு ஆசையிருக்கிறது. ஆனால் நாம் பிர்லாக்களின் சொந்தக்காரர்களாக இல்லையே என் செய்வது! குடிசை உருவத்திலாவது நமக்கு ஒவ்வொரு ஊரிலும் ஒரு இடம் தேவை. சிறுகக் கட்டியாவது பெருக வாழ்ந்திட வேண்டும்; உதாரணமாக திருச்சி மாவட்டம் வேலாயுதம் பாளையத்திலே கழகக் கட்டிடம் கட்டிக் கொள்வதற்காக தோழர் ரத்தினவேலு ஒரு இடத்தை நன்கொடையாகத் தந்திருக்கிறார். இதுபோல எல்லா இடங்களிலும் தோழர்கள் முன் வரவேண்டும்.

"என் கையிலே ஆயிரம் கட்டிடங்களின் சாவிகள் இருக்க வேண்டும். அந்த சாவிக் கொத்துடன் நான் சுற்றுப்பயணம் செய்யவேண்டும். கிளைக் கழகம் உள்ள ஊர்களுக்குச் சென்றால் இரவு எந்நேரமாயினும், செயலாளர் முதலியவர்களுக்குத் தொந்திரவு கொடுக்காமல், நமது கட்டிடத்தை நானே திறந்து இளைப்பாறுவதற்கு என் கையிலே அந்த சாவிக் கொத்து இருக்க வேண்டும்."

இந்த ஆசையை மாயூரத்திலே நமது அண்ணா வெளியிட்டார். ஆசைகளைத்தான் வெளியிட முடியும். அதற்கு ஆலோசனைகளையுமா வெளியிடவேண்டும். பிறகு ரத்தினவேலுக்கள் மனைகளை நன்கொடையாகத் தர வேண்டும். செயல் வீரர்கள் புறப்பட வேண்டும். நான் முன்பு குறிப்பிட்டேனே; அது போல வீ நட்டும் படை கிளம்ப வேண்டும். கழக மாளிகை அமைய வேண்டும். மாளிகையா? என்கிறீர்களா? ஆமாம் மாளிகைதான்! காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு! நாமே சேறு குழைத்து — நாமே கீற்று வேய்ந்து — நாமே கட்டி முடித்த சிறு குடிசை — நமக்கு மாளிகைதான்!

நாடகம் ஆடுவதும் — அதிலே நஷ்டம் வந்து விடுமோ என்று நடுக்கம் ஏற்படுவதும் — மழை வந்து விடாதே என்று வானத்தைப் பார்த்து பெருமூச்செறிவதும் எதற்காக!

ஊருக்கொரு ரத்தினவேலு — இடம் வழங்க! ஆளுக்கொரு வேலை — அமைந்துவிடும் மாளிகை! தேனீக்களிலும், திருத்தணிகளிலும், நம் கூட்டங்களில் வீசி எறியும் கற்களைக்கூட கழக மாளிகையின் ஒரு பக்கத்துச் சுவருக்கு உபயோகப்படுத்தலாம். தேனியிலே நெடுஞ்செழியன் மீது போடுவதற்கு தூக்கிய பெரிய பாராங்கல்லை கழக மாளிகையின் வாயிற்படிக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



குடிசைதான் — ஆனாலும் கொள்கை மாளிகை; நாகை வட்டாரத்து கிராமங்களில் உழவர்களோடு தொடர்புகொண்டு நற்பணியாற்றும் நண்பர்கள் சந்தானம், சௌரி ஆகியோர் முயற்சியால் பல கிராமங்களில் நமது இயக்கம் பரவியிருக்கிறது. அவைகளில் ஒன்று தஞ்சை மாவட்டத்திலுள்ள மேலவாழக்கரை. அங்கே தி. மு. கழகத் தோழர்கள் கழகத்திற்கென ஒரு கட்டிடம் அமைத்து அண்மையில் அதன் திறப்பு விழாவை நடத்தினர். தோழர் ராசகோபால் இடம் தந்து உதவினர். தோழர்கள் முயற்சியால் கட்டிடம் தோன்றியது.

நாம் தான் உலகம் வியக்கும் கட்டிடத்தை கட்டியிருக்கிறோமே — தாலமுத்து நடராசன்களின் எலும்புகளால்-வேலாயுதம், பாண்டியன்களின் நரம்புகளால் — லால்குடி நடராசன், நெல்லிக்குப்பம் மஜீதுகளின் பிணங்களால் — கையிழந்தோர் — காலிழந்தோர் தந்த ரத்த சேற்றால் — பெரியதோர் தியாக மாளிகை, வானத்தை முட்டும் உயரமுடையதாய்—தமிழர் மானத்தைத் தரணிக்கு அறிவிக்கும் தகைமை உடையதாய்-தி. மு. க. என்ற பொன்னெழுத்துக்களைப் பொறித்து — திசை யெட்டும் ஒளிபரப்பி, தியாகர், நாயர், பனசல், செல்வம் அழகிரி ஆகியோர் திருப்பெயர்களை தென்றலிலே மிதக்க விட்டு ஒலி யெழுப்பும் ஒப்பற்ற மாளிகை — உணர்ச்சி மாளிகை — திருமலை நாயக்கன் மஹாலை — தாஜ்மஹாலின் பெருமையை மிஞ்சும் விதத்திலே அமைந்த மாளிகை — கொஞ்சு தமிழ்க் குடும்பத்தாரின் கொலு மண்டபம் — கொள்கையை விளக்கிடும் மணி மண்டபம்.

அந்த மகத்தான தியாக மன்றத்தை எழுப்பியிருக்கிற நாம், உட்கார, உரையாட, படிக்க, தலைவர்கள் வந்தால் இருக்க ஒரு சாதாரணக் குடிசையை எழுப்பிக் கொண்டாலே போதுமானது. ஊருக்கோர் கழகம்— கழகத்திற்கோர் இடம் — அவசியம் தேவை — அதை அமைக்க முன் சொன்னபடி ஆற்றலும் முறையும் நிச்சயம் தேவை.

['ஆறு மாதக் கடுங்காவலில்']
மு. க.

# அபின் விற்கிறார் ஆச்சாரியார்!

மழை பெய்ய வில்லையா? அப்படியானால் அதற்குக் காரணம் ஆண்டவனின் கோபம் என்று கூறி நீ தப்பித்துக் கொள்.

மழை அதிகமாகப் பெய்து வெள்ளத்தால் பெரும் சேதம் ஏற்பட்டுவிட்டதா? அதற்கும் காரணம் ஆண்டவனின் அருளின்மைதான் என்று பிரச்சாரம் செய்துவிடு. ஜனங்கள் அப்போது அரசாங்கத்தின் போலி நிர்வாகத்தைத் திட்ட மாட்டார்கள்; அவர்கள் ஆத்திர மெல்லாம் ஆண்டவன்பால் திரும்பிவிடும்.

இந்தக் கருத்துகள் அடங்கிய நரிக்கொள்கைகளை முன்பொரு நாள் பிரச்சாரம் செய்து வந்தான், இத்தாலி நாட்டு மேக்கியவெல்லி என்னும் ஆசிரியன். அவனது அடிச்சுவட்டைப் பின் பற்றியவாறுதான் இன்றைய தினம் பீடுநடை போடுகிறார் சூழ்ச்சியின் சிகரமாம் ஆச்சாரியார். எனவேதான் அவர் புதுவேகத்துடன் ஆத்திகப் பிரச்சாரத்திற்கு 'அங்குரார்ப்பணம்' செய்திருக்கிறார். அவரைத் தொடர்ந்து 'வாரி'சுகளும், அடிகளாரும் புதிது புதிதாக இதோபதேசம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

பாகிஸ்தான் முஸ்லிம் மதத்தைச் சார்ந்த நாடாகப் பிரகடனப்படுத்தப் பட்டபோது எதிர்ப்பு பீரங்கிகள் அமைத்து முழக்கமிட்ட தேசியத் திருவாளர்களும், அவர்களை அண்டிப் பிழைக்கும் கனம்களும்-சாதாரணக் கதர்க் குல்லாய்களும்கூட 'தமிழகத்தில் மட்டுமல்லாமல் பாரத்வருஷம் எங்குமே புது வேகத்துடன் மதப்பிரச்சாரம் செய்து வருகிறார்கள். மடிசஞ்சிகளின் பாதம் கழுவி மகத்துவம் பெற்ற ராஜேந்திர பிரசாத் முதல், கூரிய வாளாய் இருந்து ஆரிய சிரேஷ்டர்களின் ஆட்சிக்கு பாதுகாப்பளிக்கும் ஆச்சாரியார் ஈறாக, ஆத்திகப் பிரச்சாரத்திற்கு ஐந்தாண்டுத் திட்டம் வகுத்துக் கொண்டு வேலை செய்கிறார்களோ?-என்றே நாமெல்லாம் சந்தேகிக்க வேண்டிய நிலையிலிருக்கிறோம். ஏனெனில், ஆதிகாலந்தொட்டு இந்த நாள்வரை ஆத்திகத்தையும், அதைச்சார்ந்த மதத்தையும் சமுதாயத்தைச் சுரண்டிப் பிழைக்கவே ஒவ்வொரு இனமும் பயன்படுத்தி வந்திருக்கிறது. இதை நாம் கூறவில்லை: 'இந்த நாட்டுக்குக் கிடைத்த வெகுமதி' யென்று ஆச்சாரியார் புகழ்ந்த நேருப் பண்டிதரே கீழ்க்கண்டவாறு கூறுகிறார், "உலகச் சரித்திரம்" என்னும் புத்தகத்தில்.

"ஆதிமத போதகரின் ஸ்தாபனத்தில் குறுகிய மனமும், துவேஷ புத்தியும், பிடிவாத குணமும், மூட நம்பிக்கையும் கொண்ட மதவாதிகள் தோன்றுகிறார்கள். மதமானது, பெரும்பாலும் அரசியலுக்கும் ஏகாதிபத்ய தத்துவத்திற்கும் உற்ற கருவியாக இருந்து வந்திருக்கிறது. மக்களிடையே மூட நம்பிக்கைகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும் வளர்க்க வேண்டுமென்பது ரோமர்களின் ராஜதந்திரமுறையாகும் ஏனெனில் அந்த நிலையில் அவர்களை அடக்கி ஆண்டு சுரண்டிப் பிழைப்பது மிகவும் எளிதான காரியமாகும். சமீப காலத்தில்கூட ஏகாதிபத்தியக் கொள்கையானது மதப் போர்வைக்குள் புகுந்து கொண்டு முன்னேறிவருவதை நாம் பல நிகழ்ச்சிகளால் அறிந்திருக்கிறோம். ஆகவே காரல் மார்க்ஸ் என்னும் அறிஞர், 'மதம் மக்களின் அறிவை மயக்கும் அபின் போன்றது, என்று கூறியிருப்பதில் யாதொரு ஆச்சரியமும் இல்லை."

இதெல்லாம் காந்தியாரின் வாரிசாம், இந்தியாவின் நிகழ்காலப் பிரதமரின் வாசகங்கள்.

இதோ காந்தியாரின் சம்மந்தியாம், இந்தியாவின் மாஜிகவர்னர் ஜெனரல் அக்டோபர் 9-ந் தேயன்று சென்னை சத்சங்கத்தில் கூறியிருப்பதைக் கேளுங்கள்;

"கடவுள்நம்பிக்கையைவளர்க்க நான் செய்து வரும் முயற்சிகளைப் பிறர் பாராட்டுவது என் அதிர்ஷ்டமே! நான் எவ்வளவோ வருஷங்கள் உழைத்து விட்டேன். ஆனால் என் உழைப்பில் இந்தக் கட்டம்தான் மிகமுக்கியமானது."

ஆண்டொன்றுக்கு ஆயிரக்கணக்கில் வருமானம் கொடுத்து வந்த சட்ட மன்றத்தை விட்டுப் பிரிந்து, சொந்த நாட்டின் சஞ்சலம் துடைக்க காங்கிரசின் விடுதலைச் சேனையில் பங்குபெற்றது அவரது உழைப்பின் 'முக்கிய கட்டமல்ல'வாம்!

கசையடிக்கும், கண்ணீர்ப் புகைக்கும் அஞ்சாமல், இசை கேட்டு அசைந்துவரும் நாகம் போல் கண்ணைக் மூடிக் கொண்டு காளையர் பலர் பின்னே வர, சட்ட மறுப்பு இயக்கம் நடத்தியது அவரது உழைப்பின் 'முக்கிய கட்டமல்ல'வாம்!

ஆகஸ்ட் துரோகி என்ற பட்டம் பெற்று, அரசியல் வானில் முதல் தடவையாக அஸ்தமனம் அடைந்தபோது, காந்தியாரின் திடீர் விஜயத்தினால் மீண்டும் புத்துயிர் பெற்று உலவ முடிந்தது அவரது உழைப்பின் முக்கிய கட்டமல்லவாம்!

ஏன், ஓரிரு ஆண்டுகளேயானாலும் உன்னத சன்னத்தாம் கவர்னர் ஜெனரல் பதவியை வகிக்க நேர்ந்ததுகூட அவரது உழைப்பின் 'முக்கிய கட்டமல்ல'வாம்! கேவலம் கால் காசுக்கு உதவாத பண்டாரங்களும் பாகவதர்களும் செய்ய வேண்டிய வேலையை, பெரிய அரசியல் ஞானி என்று பெயரெடுத்தவர் செய்வாராம்! அதுதான் அவரது உழைப்பின் 'முக்கிய கட்டமாம்'! 'அன்னியன் துணியை அணியோம், கண்கவர் கதரே எம் கண்ணியம்' காக்கும் என்ற அறைகூவலோடு மூட்டை மூட்டையாக கதர் சுமந்து விற்ற அதே தோள்களிலே, ஆச்சாரியார் இப்போது மார்க்ஸ் நாமம் சூட்டி, மோதிலால் மைந்தரும் முழுமனதுடன் ஒத்துக் கொண்ட மதமென்னும் அபினியை விற்பனை செய்வாராம், அதுதான் அவரது உழைப்பின் முக்கிய கட்டமாம்!

வெட்கம்! வெட்கம்!! இந்த நாட்டிலேதான் கேள்விப்படுகிறோம், ஒரு இனத்தை சுரண்டி வாழும் கருவி என்பது பெரும்பாலோருக்குத் தெரிந்திருந்தும் கூட துணிந்து ஒரு மாஜி அரசியல்வாதி தென்னகத்தில் அபின் விற்கிறார்; அதைத் தொடர்ந்து பொதுவாழ்வில் திசைதவறிப் போனவர்களும் வீதிக்கு வீதி கடை திறந்திருக்கின்றனர்! அவர்கள்மீது படையை மோதினால் அதற்கு இந்த ஆட்சியாளர்கள் தடை விதிப்பார்களாம்!

மக்களை மடமையில் ஆழ்த்தினால்தான் தன் இனம் சிரமப்படாமல் வாழமுடியும்; என்பதைக் கண்டுகொண்ட ஆச்சாரியாரும், அவர் தம் கூடாரமும் சூறாவளி வேகத்தில் தங்கள் ஆத்திகப் பிரச்சாரத்தை ஆரம்பித்திருக்கின்றனர். இந்த சூதுத் திட்டத்திற்கு தடையாய் நிற்கும் பகுத்தறிவுப் பிரச்சாரத்தையும், சிந்திக்கத் தூண்டும் தற்காலக் கல்வி முறையையும் முழு மூச்சோடு எதிர்த்து நிற்கத் தீர்மானித்து விட்டார்கள். அறிந்தோ அறியாமலோ சத்

[10-ம் பக்கம் பார்க்க]

## கோட்டைக்குள்ளே—பின், கூண்டிலேற்று!

*ஒரு நாட்டின் மொழியை ஒழித்தால் அந்நாடு அழியும் என்பார்கள். அந்தத் திருப்பணியைச் செய்து முடிக்க இந்திய உள் நாட்டமைச்சர் கட்ஜூ துடித்துக் கொண்டிருக்கிறார்.*

*"15 வருடங்களில் ஆங்கிலம் ஒழிய வேண்டும் என்று அரசியல் சட்டம் கூறுகிறது. ஆனால் ஆங்கிலம் ஒழிந்த உடனேயே அந்த ஸ்தானத்தை இந்தி அடைய வேண்டுமென்று அரசியல் சட்டத்தில் வசதி செய்து தரப்படாதது துரதிருஷ்டமே" என்று நீலிக்கண்ணீர் வடித்திருக்கிறார். 'அரசியல் சட்டத்திற்கு புறம்பாக நடக்க மாட்டோம் நாங்கள்' என்பதை பாவனை செய்து காட்டுகிறார் அமைச்சர். முதலில், அரசியல் சட்டம் அனுமதிக்கும் உரிமைகளை இந்த நல்லவர் (!) கள் தந்திருக்கிறார்களா என்பதே நமது கேள்வி. தனித் தனி சுயாட்சியை அரசியல் சட்டம் அனுமதிக்கத்தான் செய்கிறது. இந்த அகிம்சா மூர்த்திகள் முடித்து வைத்தார்களா? துடிக்கத் துடிக்க அல்லவா துப்பாக்கியால் சுட்டுத் தள்ளுகிறார்கள்! அரசியல் சட்டம் அனுமதிக்க வில்லையாம்! கண்ணியவான் வேடம் தாங்குகிறார் கைலாச நாதர்.*

*அதோடு மட்டுமல்ல, இப்போது முதற் கொண்டே இந்தியைத் திணிக்க வேண்டும் என்பதை மறை முகமாக வலியுறுத்தியிருக்கிறார் பாருங்கள்;*

*'ராஜ்யங்களில் ஆங்கிலத்தின் ஸ்தானத்தை பிரதேச பாஷைகள் அடையும் போது அவ்விடங்களில் இந்தியைப் புகுத்துவது சுலபமல்ல"*

*என்ன அர்த்தம் இதற்கு? பிரதேசங்களில் மொழிப்பற்று வளர்ந்து வருகிறது. அந்தந்த மாநிலத்தின் மொழிகள் வளர்ந்து விட்டால் இந்தியைப் புகுத்த முடியாது; எனவே இப்போதே அதற்கான வழி வகைகள் செய்ய வேண்டும். அதாவது, தாய் மொழிகளுக்குள்ள செல்வாக்கை ஒழித்து இந்தியைத் திணிக்க வேண்டும் என்பது தானே அதற்குப் பொருள்! அரசியல் சட்டம் அனுமதிக்கவில்லையாம்! தென்னாட்டைப் பிரித்து விட்டு—நாளைக்கே விந்தியத்திற்கப்பால் தடை யுத்தரவு பிறப்பிக்கட்டுமே, ஆங்கிலம் பேசுவோர் மீது ராஜ துரோக குற்றம் சாட்டி கூண்டிலேற்றப்படுவர் என்று! யார் மறுப்பது அதை! ஆனால் முதலில் விந்தியத்தோடு எல்லைக் கோடு கிழித்தாக வேண்டும் கட்ஜூ, அதை மறந்து விடக்கூடாது.*

# தலையங்கம்

சென்னை [ 15—10—54 ] வெள்ளி

## துரோகம் தோற்றது! தொண்டு வென்றது!!

மாவட்ட மன்றங்களின் உறுப்பினர் தேர்தல் நாடெங்கும் நடந்து முடிந்து கொண்டிருக்கின்றன; பெருவாரியான இடங்களை காங்கிரஸ் கட்சியினர் கைப்பற்றி யிருக்கின்றனர் என்ற செய்தியும் கிடைத்திருக்கிறது. 'அமோக வெற்றி' என ஆனந்தப்பள்ளு பாடுவோராக மாறித்திரிவர் காங்கிரஸ்காரர்கள் என்பதையும் நாமறிவோம். வெற்றிக் களிப்பிலே அந்த வாகை சூடிகள் ஒரு உண்மையை மறந்து விடக் கூடாது என்பதையும் நினைவூட்டுகிறோம்.

பொதுத் தேர்தலிலே காங்கிரஸ் பெருந்தோல்வி கண்டது. பின்னர் நடைபெற்ற பஞ்சாயத்து போர்டு தேர்தல்களிலேகூட காங்கிரஸ் பெருவாரியான இடங்களைப் பெற முடியவில்லை. இப்போது மாவட்ட மன்ற உறுப்பினர் தேர்தலிலே நல்ல வெற்றியைப் பெற்றிருக்கிறது. இதன் ரகசிய மென்ன?

காங்கிரஸ் மண்டபத்திலே ஏற்பட்ட பழுது சீர்படுத்தப்பட்டு விட்டதா? இருண்டுபோன காங்கிரஸ் மாளிகையிலே யாரும் ஜோதி விளக்கு ஏற்றி வைத்து விட்டார்களா? தெருவிலே விழும் பிணங்கள் குறைந்து விட்டதா? பிள்ளையோ பிள்ளை வியாபாரம் நின்று போனதா? தற்கொலைத் திருவிழாவுக்காக உத்திரத்திலே தொங்க விடப்படும் உயிர்களின் எண்ணிக்கைதான் குறைந்து விட்டதா? பசிக்குரல் அடங்கிற்றா? பாமரர் வாழ்கின்றாரா? பங்களாக்களின் தர்பார்கள் ஓய்ந்து போனதா? போலீஸ் வெறியாட்டம் நின்றதா? போலிகளின் அதிகாரம் அடங்கியதா? எதுவுமே யில்லை—ஆனாலும் தென்னகப் பகுதியிலே மீண்டும் காங்கிரஸ் பல இடங்களை இந்த மாவட்ட மன்றத் தேர்தலிலே பெற முடிந்தது— மன்னிக்கவும். காங்கிரஸ் பெற முடிந்தது என்று கூறுவது தவறு! காங்கிரஸ் பெறுமாறு மக்கள் செய்திருக்கிறார்கள். ஏன்? எதற்காக? எந்த திடீர் மாற்றத்தைக்கண்டு?

ஒரே ஒரு காரணம்தான் கூற முடியும்; அது தான் காமராஜர்!

ஆம்—காமராஜர்—ஆரியரை எதிர்க்கிறார் என்று தெரிந்த ஒரு ஜாடைதான் இவ்வளவு பெரும் அளவுக்கு வெற்றியைத் தந்திருக்கிறது காங்கிரசுக்கு.

காமராஜர் மகிழ்ச்சியடைய மட்டுமல்ல இதைக்கூறுவது! இந்த வெற்றி, காமராஜருக்கு ஒரு எச்சரிக்கை கூட! ஆரியத் தலைவர் ஆச்சாரியாரை எதிர்த்து — ஆரிய சூழ்ச்சியை எதிர்த்து — ஒரு ஜாடை காட்டினீர் காமராஜரே! வெற்றியைக்குவித்திருக்கிறோம். இதைத் தொடர்ந்து ஆரியமாயை யகன்ற திராவிடத் தனி அரசைப் பெற முனைவீர்களேயானால் — வெற்றிச் செய்தியும் உம்மைத் தொடரும் — இல்லை; மாயையில் மீண்டும் சிக்கி மாறுவீர்களே யானால் — மக்கள் சக்தி உம்மை இடரும் — என்பதுதான் அந்த எச்சரிக்கைச் செய்தியாகும்! இந்த வெற்றி தரும் விளக்கமே அது தான்! அந்த விளக்கம் சரியென்று நிரூபிப்பதற்கு எடுத்துக் காட்டப்படும் இரு நிகழ்ச்சிகள்தான் — ராஜா சிதம்பரனாரின் தோல்வியும், **கோவிந்தசாமி** அவர்களின் வெற்றியும்!

மக்களை மதியாது ஆணவ முத்திரை குத்திக்கொண்டு அலைந்த அன்பர் ராஜா அவர்கள் அனுதாபத்திற்குரியவராகி விட்டார் — **அம்பில் தர்மலிங்கத்தின்** வெற்றிக் கொடி ராஜாவின் மாளிகையைச் சுற்றி கம்பீரமாகப் பறக்கிறது.

காமராஜருக்கு வெற்றிச் செய்தியும் தந்தார்கள் மக்கள்! துரோகிகளுக்கு மறக்க முடியாத பாடமும் தந்தார்கள் மக்கள்! பல வருட காலம் மாவட்டத்து ஆதிக்கத்திற்குப் பரம்பரை உரிமை கொண்டாடி வந்தவர் இன்று தோற்றார் என்ற செய்தி, சாதாரணமானதல்லவே!

காங்கிரசின் வெற்றியைக் கூறுகிற காமராசர், அதே சமயம் துரோகிகட்கு மக்கள் அளிக்கும் தீர்ப்பையும் காணவேண்டும். அது பற்றி சிந்திக்க வேண்டும். பகைவரின் முகாமிலே விபீஷணனாகப் போய்ச் சேர்ந்தவன், சொந்த இனத்தைப் பற்றிக் கவலைப்பட மாட்டான். ஆனால் எப்போது வெளியே ஓடி வரலாம் என்று ஏங்கியிருக்கும் கைதி — பகைவரால் பிடிக்கப்பட்டு அடைக்கப்பட்டவன் — சொந்த இனத்தைப் பற்றி நினைக்காமல் இருக்கமாட்டான்.

அந்தக் கைதியின் நிலையிலேதான் இன்றைய நாடு, காமராசரை எண்ணுகிறது! காமராசர், காங்கிரஸ் என்ற வட நாட்டுப் பாசறையிலே அடைக்கப்பட்ட கைதி — சிங்காரத் திராவிடத்தைக் காக்க அவர் வர வேண்டும் — வருவார் என நம்பியே இந்த வெற்றியை மக்கள் தந்துள்ளனர். கைதி நிலை மாறி, சிறை மீட்சி கிடைத்து, பகைவர் நாட்டுத் தளபதியாகவே யிருந்து சொந்த நாட்டைச், சுரண்டி வாழ இடமளிக்க அவர் துணிந்தால்—மக்கள் அவரையும் ராஜா சிதம்பரமாக்கியே தீருவர்!

மக்களுக்கு அளித்த உறுதியைக் காற்றிலே பறக்க விட்ட துரோகம் தோற்றே தீரும் என்பதற்கு அறிகுறிதான் ராஜா சிதம்பரம் முடிவு!

மக்கள் மன்றத்திற்கு மதிப்பளித்து அவர்களுக்காகத் தொண்டு செய்வோர் வென்றே தீருவர் என்பதின் அடையாளமே **கோவிந்தசாமி** அவர்களின் பெருமித வெற்றி!

துரோகம் தோற்றே தீரும் ...
தொண்டு வென்றே தீரும்....
உடனடியாக இல்லா விட்டாலும் ஒரு நாள் அது நடந்தே தீரும்!

## குறளோவியம்

*தும்மினால் அருகிருப்போர் வாழ்த்துவர். இது பழைய கால வழக்கம். அந்த வழக்கத்தைவைத்து வள்ளுவர், காதலர்களை ஊடல் புரியமட்டும் விடவில்லை. ஊடல் தீர்ப்பதற்கும் அந்தப் பழக்கத்தைப் பயன்படுத்துகிறார்.*

*துப்புரச் சிவந்த் வாயாள் தூயபஞ்சணையின் மீது ஒப்புறக் கணவனுடன் இருந்த காலை இடையே எழுந்தது ஊடல் என்னும் காதல் திருவிளையாடல்! ஒன்பது முத்தம் தருவேன் என்று எட்டு தந்து நிறுத்தினானே; அல்லது அவள்தான் எட்டி நின்று விட்டாளோ?—கட்டிக்கரும்பே என அழைத்துவிட்டு, சுவைக்காமல் தயங்குகிறானே என்று ஊடல் புரிந்தாளோ? எண்ணி ஏன் ஒன்பது கேட்டாள்; எண்ணாமல் பெறுவதற்கு ஏன் அஞ்சினாள் என்று அவன் தான் மடிவிட்டு எழுந்தானோ? எப்படியோ .. உல்லாசபுரியில் ஊடல் நிலவு உதயமாகிவிட்டது. சில விநாடிகள் அமைதி!*

*காதலன் திடீரெனத் தும்மிவிட்டான். காதலியும், ஊடலை மறந்து "வாழ்க!" என்று வாழ்த்திவிட்டாள்.*

*"தோற்றாய்! தோற்றாய்!" என்று தோகையின் சிவந்த கன்னத்தைச் சிவக்கவைத்தான். அவளும் பின்னிக் கொண்டாள். 'தும்மல்' அவர்கள் ஊடலைத் தவிர்த்து விட்டது.*

*காதலன் சாதாரணமாகக்கூட தும்மி யிருக்கலாம். ஆனால் அவளோ, மறு நாள் காலை தன் தோழியிடம், தன் காதலனின் திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டாக,*

*"நான் ஊடினேன்—அவர் வேண்டுமென்று தும்மினார். நான் ஊடலை மறந்து வாழ்த்தி விட்டேனடி!" என்று கன்னத்தை தடவிக் கொண்டே கனிமொழி சிந்துகிறாள். அந்தக் குறள் இதோ!*

"ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை
நீடு வாழ் கென்பாக் கறிந்து."

## "வாட், நான்சென்ஸ்"

*"படம் பிடித்துக் கொள்வதில் காந்திஜிக்கு நேர் மாறானவர் ஜவஹர்லால் நேரு. படம் என்றால் தயார் என்று கூறுவார் நேரு. அது மட்டுமல்ல, அவரே படம் பிடிக்கிறார். ஒரு முறை வார்தாவில் நடைபெற்ற காரியக் கமிட்டிக் கூட்டத்தின்போது, ஜவஹர்லால் காமிராக்காரர்களோடு நின்று கொண்டு காந்திஜியைப் படம் பிடித்தார். அப்பொழுது காந்திஜி, ஜவஹர்லாலைப் பார்த்து, "வாட் நான்சென்ஸ்" என்று கூறியதாகப் பத்திரிகைகளில் வெளியாயிற்று. ஆனால் காந்திஜி கூறிய வார்த்தைகளில் சரியான தமிழ் அர்த்தம் எனக்கு இன்னும் புரியவில்லை"*

"உலகம் சுற்றும் தமிழன்"
ஏ. கே. செட்டியார். பக்கம் 229.

## அந்தணர் என்போர் அறவோர்!

★

சுதேசமித்திரன் ஆசிரியர் சீனிவாசன் அவர்கள், 'பிராமணர்' என்ற சொல்லுக்குப் புதிய பொருள் ஒன்று கூறியிருக்கிருர். "உண்மையான அறத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதில் அக்கரை கொண்டவர்களே பிராமணர்" என்பதுதான் அது!

பிராமணருக்கும், அந்தணருக்கும் வேறுபாடு தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்த நேரத்திலேதான், திருவள்ளுவர்-அந்தணரும் பிராமணரும் ஒருவரல்ல: அந்தணர் வேறு—பிராமணர் வேறுஎனகுறள் மூலம் குரல் கொடுத்தார்.

"பிராமணர்கள் அந்தணர்களே" என்று ஒரு கூச்சல் கிளம்பியிருக்கிறது. அந்தக் கூச்சலைத் தடுத்து தெளிவு தந்திருக்கிருர் வள்ளுவர்.

ஆகவேதான்—'அந்தணர் என்போர்" என்று ஆரம்பித்திருக்கிருர்.

"என்போர்" என்ற சொல்லை கவனிக்க வேண்டும்.

"நீங்கள் எல்லாம் அந்தணர்தான் பிராமணர் என்கிறீர்களே; அந்த' அந்தணர் என்போர் அறவோர்" என்று பதில் கூறியிருக்கிருர்.

பிராமணர் — பிரமத்தை உணர்ந்தவர் என்று தங்களை விளம்பரப் படுத்திக்கொண்டவர்கள். அதன் மூலமாக மக்களை அறவழி தவறி—அறியாமைச் சேற்றிலே தள்ளிவிட்டவர்கள். அத்தகைய பிராமணருக்கு புது வியாக்யானம் செய்யப்புறப்பட்டிருக்கிருர் சீனிவாசனர்! புறப்படட்டும்! பிராமணர்கள் அறவழி நின்று அறிவு போதிப்பதை அனைவருமே ஏற்போம்-


மதவெறி-ஜாதி வெறி-கடவுள் வெறி — பூணுல் வெறி—ஆகிய இந்த வெறிகளை நீக்க முடியாதவர்களிடம் அறநெறியை எங்ஙனம் எதிர்பார்ப்பது?-பிராமணர் அறவோர்என்று கூறிவிட்டால் மட்டும் போதுமா? போதாது—போதை தெளியவேண்டும்! போதி மரத்தான் காலத்திற்கு முன்பிருந்து ஏற்பட்ட போதையல்லவா அது? அது தெளியட்டும் முதலில்! அதன் பிறகு அறவோர் ஆகலாம்.

# இப்படிக்கு...



வடவேந்தர் உடல்கிழித்தேன்; வேங்கை போல!
மார்தட்டும் பகைவர்தமைக் கொன்று கொன்று,
ஓடிபட்டேன். கொல்லனிடம் அடிகள் பட்டேன்.
உடனேநான் செப்பனிடப் பட்டேன். மீண்டும்;
படைவீரன் வலக்கரத்தில் வசித்தேன். போரில்
பச்சை ரத்தம் பருகினேன். ஆனல் இன்ருே;
எடுப்பதற்கு ஆளின்றித் துருப் பிடித்து
இருக்கின்றேன்—இப்படிக்கு இரும்புப் போர்வாள்!

★




ஆவின்பால், கொம்புத்தேன், மற்றும் உள்ள
அபிடேகப் பொருள்போல; என்னைக் கொய்து
கோவிலுக்குள் அனுப்பாதே. நட்ட கல்லைக்
கும்பிடாநான், பக்தனைப்போல் முடனல்ல.
பாவுக்குள், வெண்பாவே சிறந்த தென்பர்.
பூவுக்குள் அப்படித்தான் நானும். வாழ்வில்,
தேவையுள்ள கீர்த்திபெற, என்னைப் பார்த்துத்
தெரிந்துகொள்—இப்படிக்குத், தாம ரைப்பூ!

★



மழைஎன்னும் நீர்க்கோடு; என்மேல் வீழ்ந்தால்,
மனைவிதொட்ட கணவன்போல் குளிரு கின்றேன்.
பழம்போல சுவையூட்டும் பெண்கள்; என்மேல்
படிந்தவுடன் மயங்குகின்றேன். 'தமிழாக் கூட்டம்
எழுந்ததுபார்' என்கின்ற குரலைக் கேட்க;
எதிரிகளின் பிரேதத்தை, ரத்தந் தன்னை,
இழுத்துக்கொண் டோட,இன்று விரும்பு கின்றேன்.
இப்படிக்கு ஓடங்கள் உலவும் ஆறு!

★



மண்ணுக்குள் வேர்நுழைத்து, விண்ணை நோக்கும்
மரங்களுக்குள்; வீரன்புகழ் எனக்கே உண்டு.
உண்மையிது. துதிக்கைபோல் இருக்கும் தாறு,
ஒன்றீந்தால் நின்றுவிடும் எனது மூச்சு.
எண்ணிப்பார் பெண்பாவாய்! கோழை போல,
இருநூறு தரம்வாழ்வில் இறக்கின் றேனு?
எண்ணிப்பார் என்சாவை! வீரன் சாவை!
இப்படிக்கு மலையடியில் வாழும் வாழை!

★




வெள்ளத்தால் ஆபத்து எனக்கு இல்லை.
வெந்தணலில் வெந்திடவே மாட்டேன். என்னைத்
தள்ளுவது, விளக்கணைத்து இருட்டு தன்னைத்
தருவித்துக் கொள்வதுபோல் ஆகும். மாந்தர்
உள்ளத்தை உயர்த்திடுவேன், எனேநே சித்தால்.
வேம்பென்பர் மூடர்எனை. மாவில் சேர்க்க,
மொள்ளுகின்ற பாகுஎன, அறிஞர் என்னை
மதித்திடுவர்—இப்படிக்கு இறவாக் கல்வி!

★



அகப்பொருளின் இலக்கணத்தை அறிந்து, இன்பம்
அனுபவிக்கும் காதலரை; அரசர் தம்மை;
மிகப்பெரிய புலவர்களை; நாட்டைக் காக்க
வாளெடுத்த மாதர்களைச்; சுமந்தேன். இன்ருே.
அகத்தைஇருட் டாக்குகின்ற புத்த கங்கள்
அடுக்கிவைத்த வீடுகளை; கோவில் தன்னை;
பகைவர்களைப்; பார்ப்பனரைச் சுமந்து, துன்பப்
படுகின்றேன்—இப்படிக்கு உன்தாய் நாடு!

★




★




தாழையூர் தெற்குத் தெருவே—அன்று திருவிழாக் கோலமாக காட்சி தந்தது. தேவராசன் செட்டியார் வீட்டில் விசேடம், அதுவும் அவரது ஒரே மகளுக்கு திருமணம் என்றால் சொல்லவா வேண்டும், விழாவின் விமரிசைக்கும், விதவிதமான இன்பக் கேளிக்கைகளுக்கும்! ஒரே அமர்க்களம் தான்! தெரு நீளத்திற்கும் கீத்துக் காவனம், ஒவ்வொரு மூங்கில் தூணுக்கும் ஒரு பாதரச விளக்கு! நுழைவு வாயிலிலே குலை தள்ளிய வாழை மரங்கள்!

பர்மா—பாப்ளீன் துணி செட்டியாரின் மேனியை அலங்கரித்தது. ரங்கூன் வயிரம் தான் அவர் அணிந்திருந்தது என்றாலும், மின்விளக்கின் உறுதுணையால் அது ஒளிவீசி மறைந்தது. பரங்கிப்பழம் போன்ற உடலைத் தூக்கிக் கொண்டு இயந்திரமாய் பணியாற்றினார்—பாவம்! நெற்றியிலே சந்தனப் பொட்டு—அதன் நடுவே குங்குமப் புள்ளி. "யாரப்பா, அங்கே நிற்கிறது? தேனப்பனா? போங்க, போங்க, நேரமாச்சு நேரமாச்சு மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட்டாங்களாம், மேளதாளத்தோடு போயி மாப்பிள்ளை அழைச்சுக்கிட்டு வாங்க! மறந்திடாதேப்பா, பாண்டு வாத்தியத்தையும் கூட்டிக்கிட்டுப் போய்வா!" என்று கூறிக் கொண்டே செட்டியார் பந்தலுக்கு வந்து தன் உறவினர் குழுவை அனுப்பி வைத்தார், சத்திரத்தில் தங்கியிருந்த மாப்பிள்ளை வீட்டாரை அழைத்து வருவதற்கு! சம்மந்தி வீட்டார் தரக்குறைவாக நினைத்து விடக்கூடாது என்பது தானே கலியாண வீடுகளிலே இருசாராருக்கும் இருக்க வேண்டிய பயம்! அதுவும் தென் மாவட்டங்களிலே நாட்டுக் கோட்டை செட்டியார்களுக்குத்தான் அதில் அதிக கவலை.

மாப்பிள்ளை அழைக்கப் போன பெண் வீட்டு வரவேற்புக் குழுவினர் தெருவின் தெற்கு மூலை திரும்பியதுதான் தாமதம், செட்டியார் துடிதுடித்துப்போனார். "பன்னீர் செம்பு எங்கே? சந்தனக்கிண்ணத்தை எடுத்து வா! வெள்ளி டப்பியில் 'ரசிக்கிலால்' பாக்கை அள்ளிவை! வகை கெட்டவனே வர்ணச்சுண்ணாம்பு வைக்கச் சொன்னேனேடா. வச்சியா? இந்தாப்பா, மைக் செட்டு, உன்னைத்தான், ஏன் தூங்குறாய் உம் பாட்டுக்கு பிளேட்டுகளை வச்சுக்கிட்டுரு! ஏ பொட்டு சப்ளை, ஜவ்வாதிலே நல்ல அத்தராக இப்போதே கலந்து வச்சுக்க! வரப்போறாங்க, வரம் போறாங்க! இஃம்! இஃம்!"—செட்டியார் இப்படி ஈயாகப் பறந்தார். எல்லாம் தயாராயிற்று.

காங்கேயத்துக் காளைகள் பூட்டிய திருப்புத்தூர் வில்வண்டி-புரோகிதர் பூமிநாத சாஸ்திரியும், பிரதம சீடர் பெத்தண்ணாவும் அதிலிருந்து இறங்கினார்கள். செட்டியார் புரோகிதர்களைக் கூடக் கவனிக்கவில்லை — மாப்பிள்ளை அழைக்கப்போனவர்கள் இன்னும் வரவில்லையே என்ற கவலை தான் அவருடைய கண்ணையும் கருத்தையும் ஈர்ந்து கொண்டிருந்தது. மூகூர்த்த நேரத்திற்கு கால் மணி நேரம் தான் பாக்கி இருந்தது; செட்டியார் முணு முணுத்தார்.

பதினைந்து நிமிடங்கள் பத்தாயின — செட்டியாரின் படபடப்பு அதிகரித்தது.

"தர்மா!"

சர்வ நாடிகளையும் அடக்கிக் கொண்டு டிரைவர் செட்டியாரின் முன் நின்றான்.

"காரை எடு, காரை எடு, என்ன வாயிற்று என்று பார்த்துவா!" என்று கத்தினார். அதற்குள்ளாக வரவேற்புக்குழுவோடு சென்ற தேனப்பன் ஓடி வந்து 'மாப்பிள்ளையை காணோம்; காலையில் பத்து மணிக்குப் போனவராம். இதுவரை வர வில்லை!'— என்றான். செட்டியார் பதில் பேசவில்லை. கவலையின் உச்ச நிலைக்குப் போனவர்களும், ஆத்திரத்தின் சிகரத்தில் அலைபவர்களும் ஊமையாகி விடுகிறார்கள். ஆமாம், அந்த நிலைதான் செட்டியாருக்கும். அப்போதுகூட அவரது விழிகள் ஒரு முறை தெருக்கோடியைபார்க்கத்தான் செய்தன. வந்தார்களா மாப்பிள்ளை விட்டார். இல்லை—வரவில்லை. பல்லுப்போன ஒருகிழவி தான் சில்லுப் போன பானையில் தண்ணீர் தூக்கிக்கொண்டு வந்தாள்.

ஃ ஃ ஃ

ஆருத்ரா தரிசனத்தன்று நான் பிறந்தேனாம். அதற்காக எனக்கு சிதம்பரம் என்று பெயர் வைத்தார்கள், அந்தத் 'திருநாமம்' என் வாழ்வை தீங்கனிச்சாருக்கி விடவில்லையே. படித்தேன்; பட்டம் பெற்றேன் இதெல்லாம் கௌரவத்தைத் தேடிக்கொள்வதற்கா நான் பட்டபாடுகளல்ல. கடல் தாண்டிப் போய் வட்டித்தொழில் நடத்தும் 'பணக்கடை' வியாபாரம் என் தந்தையோடு அழிந்து போகட்டும் என்பதற்காகத்தான்; கல்லூரிப் படிவாசல் ஏறியவர்கள் செட்டிமார்களிலே மிகக் குறைவு என்ற பெருங்குறையைப் போக்குவதற்காகத்தான். பொருள் சேர்ப்பதற்குமல்ல, அதை இரைத்து ஆண்டவன்(?) அருள் பெறுவதற்குமல்ல!

வாழ்வு மாயமென்று சொன்னவர்கள் தற்கொலை செய்து கொண்டதாக இது வரை நான் கேள்விப்பட்டதில்லை. உலகம் அநித்யம் என்றவர்களும் அப்படித்தான்! தங்கள் வசமுள்ள சொத்துக்களை சர்க்காருக்கா எழுதி வைத்து விட்டார்கள்? இல்லையே! அவர்கள் தானே விஞ்ஞானத்தின் அழிவு சக்தியைப் பற்றிப் பேசி விட்டு, விஞ்ஞானம் பெற்றெடுத்த விதவிதமான மோட்டார்களிலே 'திருவுலா' வருகிறார்கள்! என்னைக் கேட்டால், வாழ்க்கையை நாம் எப்படி வேண்டுமானாலும் நம் திறமை கேற்றபடி செய்து கொள்ளலாம்—வாழ்க்கை என்பது என்றும் காயாத—குழைத்த—பச்சைமண்!—இதைத்தான் சொல்லுவேன். என் வாழ்வு மலர்த் தோட்டமாகுமென்று தான் எண்ணினேன்—ஆனால் மண்மேடாகி விட்டது. அதற்கு யார் காரணம்? என்னுடைய அவசர புத்திதானே!

தேவராசன் செட்டியார் பெரிய பணக்காரர்—கேள்விப் பட்டிருக்கிறேன்— பர்மாவிலே வட்டிக்கடை பலவுண்டு அவருக்கு! சிங்கப்பூரிலே வைரக்கடை! அவர் மகளை எனக்குத்தர முன் வரும் போது பணத்தாசை கொண்ட என் தந்தை மறுக்கவா செய்வார், சந்திரா, தேவராசன் செட்டியாரின் குலக் கொடி. அவள் எனக்கு மனைவியானால் சொத்தில் பெரும் பகுதி எனக்குத் தானே! இந்த எண்ணம் தான் என் தந்தைக்கு. வேறு என்ன இருக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்?

வெளியூருக்குச் சென்றால் குறிப்பிட்டுப் போனதினத்திற்குள் கண்டிப்பாக வந்து சேர்ந்து விடுகிறவர் என் தந்தை. அந்த முறை, தவணை தவறி மூன்று நாட்களாகியும் வரவேயில்லை. ஞாயற்றுக்கிழமை வருவதாகச் சொல்லிப் போனவர் வியாழக் கிழமைதான் வந்தார். அவர் முகத்திலே என்றுமில்லாத மகிழ்ச்சிக்குறி — நான் கண்டிரா இன்பக்களை!

"சிதம்பரம்!"

"வந்து விட்டேன்"

"கடல் தாண்டி பணம் சேர்த்து உன்னைப் படிக்க வைத்தேன், கைமேல் பலனை அனுபவிக்கப் போகிறேன் சிதம்பரம்"

"மத்திய சர்க்கார் உத்தியோகம் காலியாக இருக்கிறதா என்ன?"

"உத்தியோகம் கிடக்கிறது; அது ஒரு உதவாக்கரை வேலை. தேய்வலோக வாழ்வு உன்னை தேடி வருகிறதடா திருமகனே! சித்தம் விரும்பியதைச் செய்ய செல்வம், அதை முடித்துத்தர ஆள் அனுசரணை, அத்தனையும் உன் காலடியிலே சரணடைய உன் 'திருவுளத்'தின் கருணை தானடா பாக்கி! தேவராசன் செட்டியார் தெற்கு வட்டாரத்திலேயே பெரிய சீமான், எப்படியோ நம் குடும்பத்தின் கௌரவம் அவருக்குத் தெரிந்திருக்கிறது. தன்னுடைய ஒரே மகளை உனக்குத் தருவதாக சொல்லி விட்டார் நினைத்து நினைத்து நாம் பெருமைப் படக்கூடிய செய்தி. யாருக்குக் கிடைக்கும் இந்தச் சம்மந்தம்? கல்யாணம் முடிந்த மறுநாளே இருக்கின்ற சில்லரைக் கடன்களை தீர்த்து விட்டால், அப்புறம் எனக்கு என்ன கவலை? அதோ புகைப் படத்தைப்பார், உன் தாயார் இதை யெல்லாம் கேட்டு சந்தோஷப்படுவது போலில்லையா? இதையெல்லாம் அவள் கண்ணாலே பார்த்து விட்டு கண்ணை மூட முடியவில்லை.'

"பணக்காரர், செல்வாக்கு மிக்கவர் என்பதற்காக பெண்ணைப் பார்க்காமலா திருமணத்திற்கு இசைவது? திருமணம் என்பது ஒரு நாளைய நிகழ்ச்சி தான் — இன்ப விழா தான்—ஆனால் வாழ்வுப் போர்முனைகளிலே அதுவும் ஒன்று தந்தையே! துணைவியைத் தேர்ந்தெடுப்பது மாடுகளுக்கு ஜோடி சேர்ப்பதைப் போன்று என்று நினைக்கிறீர்கள்! மாடுகளுக்கு

[8-ம் பக்கம்]

## சென்னை - பொதுக்கூட்டம்

★

சென்னை — மீர்சாகிப் பேட்டை (43-வது வட்டம்) தி. மு. க. சார்பில் 10—10—54 மாலை ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் வி. கன்னியப்பன் தலைமை வகித்தார். கவிமணி தேசிகவிநாயகம் அவர்கள், காஞ்சி அருணாசலம், நுங்கம்பாக்கம் பழனி ஆகியோரின் மறைவு குறித்த அனுதாபத்தீர்மானத்தை கழகச் செயலாளர் மு. புரட்சிமணி படித்து நிறைவேற்றியபின், தோழர்கள் மு. கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., புதுமை நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், முகவை ஆர், எஸ். பாண்டியன், இளம்பரிதி, ஆகியோர் விரிவுரையாற்றினர்கள். கழக அனுதாபமுள்ள எம். எல். ஏக்களும், பிரமுகர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. கூட்டத்தில் உண்டியல் மூலம் ரூ 18-9-0. கிடைத்ததாக அறிவிக்கப்படுகிறது.


—ரஃபி.




## அவன் யார்?

### 9.

மாயாண்டிக் கிழவர் பிரயாணம் செய்த கள்ளத் தோணி போலீசாரிடம் சிக்கிய அதே நேரத்திலேதான் — முரடர்களின் கையிலே சிக்கிய பரிமளாவும் பிரக்ஞையற்ற நிலையில் தூக்கி வரப்பட்டாள், அந்த எழில் முக்லைக்கொடி எங்கு கொண்டுபோகப் படுகிருள்? பறித்துவிட்ட அல்லித் தண்டுபோல் துவண்டு கிடக்கும் அந்தத் தோகைமயிலை — தொட்டாலே இனிக்கும் சுவைப் பேழையை— தொடுத்தெடுத்த மலர்க்குழுவை— தோளிலே சுமந்து ஓட்டமும் நடையுமாக விரைந்து கொண்டிருந்தார்கள், அந்தக் கொழுத்த மனிதர்கள். சுமைதாங்கும் கழுதைக்கு முதுகிலே அடுக்கியிருக்கும் பட்டுத்துணியின் அருமை பெருமை தெரியுமா? பரிமளாவைத் தூக்கிச் செல்லும் துஷ்டர்களும், கழுதையைப் போல எஜமானவிசுவாசத்தை மட்டும் கடமையாகக் கொண்டு காரிய மாற்றினுர்கள். அதனுல் பரிமளா—மந்தி கை சிக்கிய மாலையாகாமல் — காப்பாற்றப் பட்டாள்!



அந்தக் காட்டான்களின் மந்தை கடற்கரை நோக்கித் தான் போகிறது என்பது விரைவிலே தெரிந்து விட்டது. "வேகமா! வேகமா!" என்று ஒருவன் மெதுவாக சப்தம் போட்டுக் கொண்டே போனுன். அவனைத் தொடர்ந்து மற்றவர்கள் ஓடிக் கொண்டிருந்தார்கள். பின்னுல் யாராவது தொடர்கிருர்களா என்று சிலர் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டார்கள். அவர்களது வேகமான நடையிலே, அவர்களது பார்வைக்கு ஆகாயத்திலே நிலவும் வேகமாக ஓடுவது போல் தெரிந்தது ஓடும் நிலவின் பிம்பத்தை தண்ணீரில் தான் காண முடியும்; இதோ தரையிலும் காண முடிகிறதே என்பது போல் பரிமளாவின் முகம் காட்சியளித்தது. ஆம்; தெளிவற்று வாடிக்கிடந்தது அவள் வதனம். கடற்காற்று 'ஜில்' என்று வீச ஆரம்பித்தது. கரையின் அருகாமையிலே வந்து விட்டோம் என்ற உற்சாகம் பிறந்தது அந்த முரட்டுக் கூட்டத்திற்கு! கடல் அலைகள் கரையிலே மோதிக் கிளம்பும் ஓசையும் காதிலே விழுந்தது— இன்னும் அருகே வந்து விட்டார்கள் — துஷ்டனின் தோளிலே கிடந்த பரிமளா மயக்கம் தெளிந்தாள். இதயம் நொறுங்கிச் சிதறிவிடும் போன்ற உணர்ச்சியால் பீடிக்கப் பட்டாள்—கண்களை மெதுவாகத் திறந்து பார்த்தாள். சிறுவயதிலே அவளுடைய பாட்டி சொல்லுவாள்; சாவு என்ருல் என்ன என்று!

"யமலோகத்திலே யிருக்கிற எருமையேறும் தருமராஜன், தன்னுடைய ஆட்களிடம் பாசக்கயிறு கொடுத்து உயிர்களைப் பிடித்து வரச் சொல்லுவான். அந்த ஆட்களுக்கு யம கிங்கிலியர் என்று பெயர். அவர்கள் உயிர்களைப் பிடித்துக் கொண்டுபோய் யமனிடம் சேர்ப்பார்கள். போகும் வழியெல்லாம் பயங்கரமாயிருக்கும். நெருப்பாறு ஓடும்—அதில் மயிர்ப்பாலம் இருக்கும் — கல்லும் முள்ளும், தேளும் பாம்பும். முதலைகளும், புலிகளும், யானைகளும் நிறைந்த காடுகளைக் கடக்கவேண்டும். உயிர், யமலோகம் போவது என்ருல் அதுதான்!"

இதுபோலப் பாட்டி பல முறை சொல்லியிருக்கிருள்; ஒரு முறை யமலோகம் போய்ப் பார்த்து விட்டுத் திரும்பயவள் போல! அந்தக் கிழவி சொன்ன கதைகளை அப்போதெல்லாம் பரிமளா கிண்டல் செய்திருக்கிருள்—ஆனுல், இப்போது யமலோகம்—யம கிங்கிலியர் — என்பதெல்லாம் பொய் யென்ருலுங்கூட, தான் தூக்கிச் செல்லப் படும் அந்தக்காட்சியும், தூக்கிச் செல்லுகிற ஆட்களின் தோற்றமும், பாட்டி சொன்ன ...ழைய

கதைகளைபரிமளாவுக்குஞாபகப்
படுத்தத் தவற வில்லைதான்.
இறந்து போய் விட்டதாகவும்
தன்னுடைய உயிரை யாரோ
தூக்கிகொண்டு போவதுபோல
வும்மட்டுமே அவளால் நினைக்க
முடிந்தது. ஒருசமயம்; தான்
காண்பது கனவா என்று கருதி
ளுள். அய்யோ இது கனவா
கவே இருந்து விடக்கூடாதா
என்று வேண்டிக் கொண்
டாள். தூங்கிக் கொண்டிருப்
பது போலவும், சீக்கிரம் விழித்
துக் கொள்ள முடியாமல்
அவஸ்தைப் படுவது போலவும்
நெளிந்தாள்.

குழப்பத்தின் கொடிய நகங்
களால் கீறப்பட்டுத் தவித்
அவளுக்கு புதியதோர் சக்
யையும்—ஆறுதலையும் மின்ன
போல அளித்து மறைந்த
எதிரே காணப்பட்ட அந்த ஏ
டுக்கு எழிற் கோபுரம்
மனேரா! அதைப்பார்த்த பரி
ளாவுக்கு சிறு மனச்சாந்தி ஏ
பட்டது என்ருலும் அந்தசாந்
நீடிக்கவில்லை. ஊருக்குப் ப
கத்திலேதான் இருக்கிறே
என்ற நிம்மதி—அதோடு, த
காதலனேடு தனித்திருந்
மாளிகை என்ற எண்ணம் இ
போதும் தன் காதலன் அ
ருந்து தன்னைக் காண்கிறு
என்பது போன்ற உணர்வு
இத்தனையும் பரிமளாவின் உ
ளத்திலே 'பளிச்' 'பளிச்' எ
மின்னி பழையபடி வேத
யிலே அவளை வீழ்த்திவிட்ட
கண்களை மூடிக்கொள்
சிறிது ஆறுதலாக இருந்த
அவளுக்கு. கனவுலகத்
மரணயாத்திரை நடத்துவ
பயமூட்டக் கூடியது எ
லும், விழித்துக் கொண்
கனவு கலைந்துவிடும் என்ற
திடமான எண்ணம், எங்
ஒரு மூலையிலிருந்து எ
எட்டிப் பார்த்துக் கொ
ருக்கு மல்லவா? அந்த
ணத்தை மட்டுமே துணைய
கொண்டு, பரிமளா துவ
கிடந்தாள்,

அந்த மனிதக் கூட்டம்,
ளுடன் மனோராவில் நு
தது. உப்பரிகையின் படிக
ஏறி ஏறி ஒவ்வொரு ஆ
பின்னுக்குத் தங்கிவிட்டா
இரண்டொருவர் மட்டு
பரிமளாவைத் தூ

கொண்டு போய் மனோராவின் முதல் தளத்தில் வைத்தார்கள். பரிமளா, கண் விழித்துப் பார்த்தால் எதிரே என்ன கோர நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்குமோ — அதை யே ன் பார்க்க வேண்டும் — என்று கருதி, கண்களை இறுக்கி மூடிக்கொண்டிருந்தாள். மேல் தளத்துப் படிகளிலேயிருந்து யாரோ கீழ் நோக்கி இறங்கிவரும் செருப்பு சப்தம் கேட்டது. ஆட்கள் மேலே ஆவலாகப் பார்த்தார்கள், ஒருவன் அந்தப்படியின் பக்கம் மேலே ஏறிப்பார்த்து விட்டு அவசரமாக கீழ்நோக்கி ஓடிவந்து மற்றவர்களிடம். "ஏ, வாங்க—வாங்க — அவர் வந்துட்டார்— அ வ ர் தான்!" என்று கூறினன். பரிமளாவிடம் நின்ற இரண்டொருவரும் அதை விட்டுப் போய் விட்டார்கள். பரிமளா தனியாக அந்த உப்பரிகைத் தளத்திலே கிடந்தாள்.

பகல் நேரங்களிலே அந்தப் பக்கம் மேய்வதற்குவரும் ஆடு மாடுகள் தாங்கள் சுலபமாக ஏறி இளைப்பாரக்கூடிய இடமாகத் தேர்ந்தெடுத்திருந்தது அந்த அடித்தளம்தான். அவைகள் இளைப்பாறியிருந்தால் அந்தத் தளம் எப்படியிருந்திருக்கும்! கண்மூடிக்கிடக்கும் பரிமளாவின் மூக்கைத் துளைத்தது நாற்றம்—அதோடு படிகளில் இறங்கிவரும் செருப்பின் சப்தமும் அவள் காதுகளில் பயங்கரமாக எதிரொலித்துக் கொண்டிருந்தது. அந்த ஒலி அருகே வந்துவிட்டது. யாரோ, ஒரு ஆள்—அவன் தன்னிடம் வருகிறன். உலகத்தில் ஒருபெண், தன்னையே நம்பி-தன் பலத்தையும் மனோ திடத்தையும் உபயோகித்துக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அந்த உயரிய பொருளைக் கொள்ளையிட வந்துவிட்டான்; உயிரிழந்தும்கூட உலகத்திலே வாழுகிறார்கள்; புகழுடலிலே புகுந்துகொண்டு! ஆ னு ல் மானத்தை இழந்தால் சொந்த உடலில் உயிர் இருக்கும்போது கூட வாழ முடியாதே-அதை வாழ்க்கை என்றும் கூறமுடியாதே! இந்த நினைவுச் சுருள்கள் அவள் நெஞ்சத்திலே விரிந்து பரந்தன. இதயத்தின் விளிம்புகளைத் தொட்டுக் கொண்டு நின்றன. புயலும் இடியும் போட்டி போட்டுக் கொண்டு முழங்குவதுபோல அவள் நெஞ்சில் குமுறல் எழுந்தது. திடீரென அமைதி. செருப்பு சப்தம் நின்றது. அவள் உள்ளத்திலும் ஒரு விநாடி சுடுகாட்டு அமைதி சூழ்ந்தது.

என்ன

"பரிமளா! கேட்டு—ஏ, பெண்ணே சுவில்லை. டி! எழுந்திரு!" னித்தேன். அ ங்கியிருந்தன.

இந்தக் த முட்டிய பா, ஒரு மாதிரியா இப்போ நீர்கள்? உடம்புக்கு வும் து... டாக்டரை

பிணமாகிவிடக்கூடாதா என்று ஆசைப்பட்டாள்.

"கண்ணைத்திற--அட!-திறக்கிறியா இல்லியா?"

ஒரு சிறு கம்பால் பரிமளாவின் மேனி தீண்டப்பட்டது. அது அவளுக்கு பாம்பு ஊர்ந்தது போலிருந்தது தோலில்!

"டே—பயப்படாதேகுட்டி! எழுந்திரு—இல்லேன்ன......"

ரேக்ஸியார்.

குரலிலே அதிகாரம், முரட்டுத்தனம் இருந்ததே தவிர கனிவு இல்லை.

"எழுந்திரு! இல்லேன்ன..." என்ற வார்த்தை வந்ததுதான் தாமதம்; பரிமளா, அலறிக் கொண்டு அவளையுமறியாமல் எழுந்து நின்றுவிட்டாள். எதிரே பார்த்தாள். கண்களை அகலத்திறந்து விழித்தாள். டக் டக் என்று இமைகளைத் திறந்து திறந்து மூடினுள். தெளிவாகத்தான் பார்க்கிறோமா என்றஐயமும்அச்சமும் சேர்ந்து எழுந்தது. சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எதிரே நின்று பேசுகிறவரை உற்று நோக்கினுள். எதிரே வெள்ளியம்பலம் நின்று கொண்டிருந்தார்.

"துடிக்காதே பெண்ணே— உனக்கு ஒரு ஆபத்தும் வராது—"

"இப்போது வந்திருப்பதற்குப் பெயர் என்ன?

"இதை ஆபத்துன்னு நினைக்கிறியா?"

"அகராதியைப் புரட்டிப் பார்க்கிறேன்; வேறு வார்த்தை இருக்கிறதா என்று!"

"நீயே பெரிய அகராதி தானே—"

"அய்யா-ஊருக்குப் பெரிய மனிதரே; என்னை ஏன் இங்கு தூக்கிக் கொண்டு வந்தீர்? அதைச் சொல்லும்"

"பரிமளா! நான் ஊருக்குப் பெரிய மனுஷன் மாத்திரம் இல்லலே...நான் நினைச்சேன்னு.. நூறு கொலை..."

'தேங்காய் வெட்டுவீர்னு எனக்குத் தெரியும்—தேவையான விஷயத்தைச் சொல்லும்'

"பெண்ணு! நீ னைக்கிற மாதிரி—

எதுவும் இங்க நடக்காது-நான் உன்னை இங்க கொண்டாந்திருக்கிறது; உன்னைக் காப்பாத்தவே தான்-உன் மேல உங்கப்பனுக்கு ஒரே சந்தேகம்-உன்னைக்கொல்லவே திட்டம்போட்டு, எனக்கிட்ட காலையிலே கோபமா சொல்லிட்டுப் போனன் - அதிலே யிருந்து உன்னைப் பாதுகாக்கத் தான் முதல்லெ நான் கவலைப் பட்டேன்"

"ஆகா--ஆடு நினைகிறதே என்று ஓநாய் அழுத தாம்"

"அடமுட்டாளே- இதைக் கேளு; உனக்கு ஒரு ஜோடி யிருக்கிருன்னு நானும்தெரிஞ்சு கிட்டேன் - உங்கப்பனும்தெரிஞ்சுகிட்டான்-உங்கப் பன்கையிலேயிருந்துஇப்பநான் உன்னை மீட்டிவிட்டேன் -- எனக்கு நீ ஒரே ஒரு உபகாரம் செய்-போதும்!"

"நீர் என்ன பேசுகிறீர் என்றே எனக்குப் புரியவில்லை அய்யா!"

"நீ மறுபடியும் வீட்டுக்குப் போயிபாரு! அப்பத் தெரியும்: இந்த அம்பலம் சொன்னது நிஜமா? பொய்யா? என்று! தாண்டவன் என்கிட்ட தாண்டிக் குதிச்சதும், ஒரே வெட்டாக வெட்டி உன்னைப் புதைத்துவிடப் போகிறேன் என்று கூச்சல் போட்டதும் எனக்கல்லவா தெரியும்-"

"நான் அப்படி செத்திருந்தாலும் பரவாயில்லை போலிருக்கிறதய்யா-இங்கு வந்து இந்த இருட்டில் இப்படி நிற்பதை விட...."

'அய்யோஅய்யோ-நீ சாவதா?- சீசீ!-பைத்யக்காரப் பெண்ணு- என் ஆசையெல்லாம், நீயும் சாகக்கூடாது...அதோட; அந்த ஒரு விஷயத்தை மட்டும்எனக் கிட்ட சொல்லிடணும்!"

"என்ன விஷயம்?"

"அதுதான்-உன் ஆசைக் காதலன் இருக்கானே; அவன் யார் என்று!"

பரிமளா பேசாமல் நின்றுள். தன் காதலன் பெயரை விசாரிப்பதற்கு இவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்வானேன், இந்தப் பெரிய மனிதன்-என்று சிந்தித்தாள்.

"என்ன மௌனமாகி விட்டே--சொல்லும்மா-அவன் யாரு? எங்கேயிருக்கான்?— அதெல்லாம் மறைக்காதே— உனக்கு ஒருத்தன் உண்டுன்னு எனக்குத் தெரியும்; இதபாரு; உன் ஆளு செருப்பை!" என்று கூறியபடி அம்பலம் படிக்கட்டுப் பக்கம் போட்டிருந்த ஒரு செருப்பை எடுத்து அவளிடம் காட்டிச்சிரித்தார். அந்த செருப்பு, தன் காதலன் துரையினுடையது என்பதைத் தெரிந்து கொண்டாள் அவள். காதலன் அணியும் பொருள் அது என்பதிலேயும், அதைக் காண்பதிலேயும், அவள் ஒரு மகிழ்ச்சியடைந்தாள்.

"என்ன கண்டுபிடிச்சேனு? பாரு என் சாமர்த்தியத்தை— பரிமளம் - சொல்லிடு, அந்த ஆசாமி யாருன்னு?"

"அவரைப்பற்றி நீர் ஏன் தெரிந்து கொள்ளவேண்டும்?"

"ஆளைத் தேடிப் பிடித்து உனக்குக் கல்யாணமே செய்து வைப்பேன் — உனக்குத்தான் தெரியுமே; ஊரிலே நடக்கிற நல்லது கெட்டது எல்லாம் என்னுலதானே நடக்கிறது!"

"கல்யாணம் செய்து வைக்கும் சிரமம் எல்லாம் உங்களுக்கு வேண்டாம்."

"பரிமளம்-வீணுகப் பேசாதே-அவன் யார் என்று எனக்குச் சொல்லிவிடு! இல்லாவிட்டால் உன்னை விடமாட்டேன்- அவனை என்னிடம் சொல்லிட்டா, நீயும் உங்கப்பன் கோபம் தணியிற வரையிலும் என் வீட்டிலேயே இருக்கலாம் —என் வீட்டிலே இருந்தா உங்கப்பனும் ஒண்ணும் செய்ய முடியாது!"

"எனக்கு யார்வீடும் தேவையில்லை — என்னை விட்டு விடு மய்யா !"

"முடியாது—பரிமளம்--என் கோபத்தைக் கிளராதே —என்னைப் பற்றி உனக்குத் தெரியும் —சந்து வீட்டு சந்தான கிருஷ்ணன் தலைபோன இடம் இன்னும் தெரியிலே! புதுப்பட்டினத்திலே உடம்பும், சேது பாவா சத்திரத்திலே காலும், நாடியத்திலே கையும், நடுக்கடலிலே தலையும் மிதந்துதே— நாராயணப் பெருமாள் சாவு ரகசியத்தைத்தான் சொல்றேன்; அதை யெல்லாம் மனசிலே வச்சுக்கிட்டு என் கிட்ட பேசு !'

(10-ம் பக்கம்)



# திருமணம் ...

5-ம் பக்க தொடர்ச்சி

சுழிகளும், சுருண்ட கொம்புகளும் ஒத்திருந்தால் போதும்; மனிதர்களுக்கு அப்படியில்லை அப்பா!

“போதுமடா சிதம்பரம், உபதேசம்! நீ படித்தவன், துடுக்குத்தனமாக எதையாவது கேட்டுவிடுவாய் என்று தெரிந்துதான் பெண்ணின் படத்தையும் வாங்கி வந்திருக்கிறேன்” என்று கூறி பெட்டியைத் திறந்து ஒரு புகைப்படத்தை எடுத்துத் தந்தார். படத்தைப் பாரத்தேன். பேரழகிதான், நேரில் பார்த்தால் பேசும் பொன்னேவியம் என்று தான் சொல்லுவார்கள். நான் கூட அப்படிதான் எண்ணி விட்டேன்.

“சிதம்பரம் என்ன சொல்லுகிருய்? தேவராசரிடம் உறுதி கூறி விட்டேன். திருமணத்திற்கு தேதியும் குறித்தாகி விட்டது, மறுத்துப்பயனில்லை — மானத்தைக் கப்பலேற்றி விடாதேடா!”

புகைப்படத்தைப் பார்த்த அளவில் எனக்குத் பெண் திருப்தியாகத்தான் பட்டது. திருமணம் பெண் வீட்டிலே, தாழையூரில்! குல தெய்வத்திற்குபூசை போடப் போவதைப் போல சுற்றத்தார் புடை சூழ தாழையூருக்குக் கிளம்பினேம். கோலாகலமான வரவேற்பு எங்களுக்கு! இருக்காதா? கோடீஸ் வரன் வீட்டு சம்மந்திகளல்லவா நாங்கள்!

ஃ ஃ ஃ

காலை ஒன்பது மணி அப்போது! பிற்பகல் மூன்று மணிக்குத்தானே முகூர்த்தம் என்று எல்லோரும் கண்ணயர்ந்து விட்டார்கள். மாட்டு வண்டியில் வந்த களைப்பு அவர்களுக்கு! நான் மட்டும் என்னுடைய வருங்கால இன்ப நினைவுகளை எண்ணிக் கொண்டே என் கடைசித் தங்கை இந்திராணியோடு விளையாடிக் கொண்டிருந்தேன். இந்திராணி சிறுமி—பாலர்வகுப்புப் படிக்கும் பெண்.

“எண்ணு எப்படிண்ணு அண்ணியோடெ பேசுவே” என்று கேட்டாள்.

“எனக்கென்ன வெட்கம்? உன் அண்ணிதான் வெட்கப் படப் போகிருள். நீ வேண்டுமானல் பாரேன்.” என்றேன் நான்-வினயமாக.

“அண்ணி பேசமாட்டது! உஹா...ம்!”

“இரண்டு நாளைக்கு அப்படித்தான் இருப்பாள்; அதற்கப்புறம் தானுகவே வந்து பேசிடுவாள் உன் அண்ணி!”

[illegible] பொய்! அண்ணி [illegible]ணா, ஊமை! எப்படி [illegible]பச முடியும்?”

[illegible] அப்பா [illegible] சிறுமி [illegible] யா [illegible] டி

[illegible]தின் உண்மையின் சாயல் அங்கிருந்தோர் முகக்குறிப்பால் நன்கு விளங்கிற்று. என் உள்ளம் வேக ஆரம்பித்தது. “ஊர் வசியாக இருந்தாலென்ன, உத்தமி பத்தினியாக இருந்தாலென்ன, உரையாட முடியாத ஊமைப் பெண்ணுக்கா தாலிகட்டுவது? ஐயோ நண்பர்கள் நையாண்டி செய்வார்களே! பணத்திற்கு ஆசைப்பட்டு படத்தையல்லவா திருமணம் செய்து கொண்டுவிட்டான் சிதம்பரம், படித்தவனுயிற்றேஅவன் என்று பந்துக்கள் சிரிக்கமாட்டார்களா? வாலிப உலகத்திற்கு நானெரு கேலிச்சித்திரமாவதா? முடியாது முடியவே முடியாது!” —உள்ளொளி இவ்வாறு இடித்துரைக்க, அரை மணி நேரத்திற்குள் தாழையூர் கடந்து விட்டேன். வயற்புரங்கள், வாழைத் தோட்டங்கள், தென்னங் கூட்டங்கள், சின்னஞ்சிறு நீர் தேக்கங்கள் எல்லாம் தாண்டி விட்டேன். தாழையூரே மறைந்து விட்ட பொழுது தேவராசன் செட்டியாரின் மாடி வீடு மட்டுமா தெரியப் போகிறது!

இரவு ஏழு மணி! தாழையூர் சிவன் கோயில் உச்சிவிளக்கு மின்மினி பூச்சியைப் போலத் தெரிந்தது. அன்று காலை வரை, தொடர்ந்தேன்.

ஓலைக் குடிசை! அது தான் அவர்களுக்கு உப்பரிகை போலும்! குடத்தை வைத்து விட்டுகயிற்றுக் கட்டிலிலே படித்திருந்த ஒரு ஆடவனின் பக்கத்தில் அமர்ந்தாள். கண்ணுக்குப் புலப்படும் வகையில் ஆட்கள் உட்கார்ந்திருந்தாலும் ‘யாரது வீட்டில்?’ என்று கேட்பது தானே தமிழ் முறை!

“வீட்டில் யாருங்க!”

“யார்ப்யா இந்த நேரத்தில்?” —கட்டிலில் படுத்திருந்த ஆடவர் சொன்னர்.

“தாகம் தாங்க முடிய வில்லை; கொஞ்சம் தண்ணீர்......!”

“ஐயாவுக்குத் தாகமாமே, அர்த்தராத்திரியிலே!” கிண்டலாகப்பேசினர் அந்தக் கட்டில் மனிதர்.

பெண் உள்ளம் மேடு பாய்ந்ததல்லவே! பணத்தின் ஆழத்தைக் காட்டிலும் பாதாளமாயிற்றே! “ஐயோ பாவம்! என்னமோ, ஏதோ! தண்ணீர்தானே கேட்கிறுர்கொடுத்தால்தான்என்னவாம் செய்திருக்கிற பாவம் கண்ணை மூடிவிட்டது, இன்னும் வேறு பாவமா சய்யணும்” என்று எனக்குப் பரிவாகப் பேசினுள் அந்தப் பெண்மணி,

தண்ணீர்குடித்தேன். அதோடு ‘பசி’ என்பது இரண்டு எழுத்துக்களின் கோர்வை என்ற அளவிலே தான் எண்ணியிருந்திருக்க முடியும். அந்தச்சிறு சொல் உலகத்தில் ஏன் பெரும் பெரும் புரட்சிகளை உண்டாக்கியிருக்கிறது, ஏன் அவ்வாறு உண்டாக்கக் கூடாது என்பதை அனுபவப் பூர்வமாக உணர்ந்து கொண்டேன். நாக்கு வரண்டு விட்டது. தாகத்தால் தொண்டை கம்மி விட்டது. பக்கத்திலே பெரிய கண்மாய்-க்கரை மிக உயரம். அந்தக்கரை மீது ஒரு விளக்கு மட்டும் நகர்ந்து கொண்டே சென்றது. அருகில் சென்று பார்த்ததில் நடுத்தர வயதுள்ள ஒரு குடியானப் பெண் தலையில் எண்ணெய் விளக்கை வைத்துக் கொண்டு இடுப்பில் மண் குடத்தோடு போவது தெரிந்தது. வழி மறித்து தாகம் தீர்க்க தண்ணீர் கேட்டால், கள்ளன் என்று கத்திவிடுகிருளோ, காமுகன் எனத் திட்டிவிடுகிருளோ என்ற பயம். பசி ஒரு பக்கம், பயம் ஒரு பக்கம்; நடுவிலே நான். நள்ளிரவில், தன்னந் தனியளாய் பீடு நடை போட்டுப் போகும் அந்த தமிழ் பெண்ணைப் பின் கண்ணீர் வடித்துக் கொண்டே இரவு பகலாக பதினைந்து ஆண்டுகள் கல்விகற்றும். படித்துக் கொண்டிராத நல்லதோர் பாடத்தையும் பெற்றுக் கொண்டேன்.

“அந்தக்கட்டில் மனிதன் என் கணவர்-குருடர்-பிறவிக் குருடரல்லர்—இடைக்காலத்திலே—பத்தாண்டுகளுக்குமுன் இயந்திரத் தொழிற் சாலையில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது தீப் பொறிகொட்டி கண்கள் அவிந்து விட்டன. பருவ இளைஞரை நிறைந்தவர் குருடராக வெளி வந்திருக்கிறுர் தொழிற்சாலையை விட்டு! இருந்தது காணி நிலம்—இன்றும் அதுதான்! அவருக்கும் சேர்த்து நான்தான் உழைக்கிறேன். ஓய்விருந்தால் கூலிவேலை செய்வேன்—மற்ற போதெல்லாம் உழவுத்தொழில்தான்” என்று அந்தப் பெண்மணி சொன்னுள்.

எந்த உள்ளொளி “உரையாட முடியாத ‘ஊர்வசி ஏன்” என்று கேட்டதோ, அதே உள்ளொளி காட்டுக்குள் வந்ததும் திரும்பிக் கொண்டது. “குருட்டுக் கணவனேடு குதூகலமாக வாழ்க்கை நடத்துகிருள் சிதம்பரம், அந்தப் பெண்; படித்தவன் நீ, பணமுண்டு நிறைய; உன் மனைவி நாக்கில்லா மணி என்பதால் வாழ்வு நசித்தாபோய் விடும்! ஊமைக்கு வாழ்வளித்தான் உத்தமன் என அறிவுலகம் போற்றுமடா உன்னை! ஓடு, சந்திராவை ஏற்றுக் கொள்” திருப்பிச் சுட்டது உள்ளொளி. கண் தெரியவில்லை எனக்கு. வரும் போதுநெறிஞ்சிமுல்லைப்பார்த்து வந்தவன்தான், போகும்போது நெடிய வேலிகளைக் கூடப் பொருட்படுத்தவில்லை.

பாழடைந்த கோயில்! பக்கத்திலே இரண்டு தகரக் கொட்டகைகள். அதைச் சுற்றி திட்டு திட்டாக எருக்கஞ் செடிகள். ஆங்காங்கே உடைந்த பானைகள். நிலவொளி காட்டிய இந்த அடையாளங்கள், அதுதான் தாழையூர் மயானம் என்பதைவிளக்கின.

கொஞ்சதூரம் சென்றேன். ‘தொப் தொப்’ என்ற சப்தமும் அதைத் தொடர்ந்து ஒரு எதிரொலியும் கேட்டது. போலீஸ் காரர்கள் புடைசூழ சர்க்கிள் இன்ஸ்பெக்டர் உட்கார்ந்திருந்தார். இருவர் குழி வெட்டிக் கொண்டிருந்தார்கள். மரிக்கொழுந்துமாலை மணம் வீச, பிரேதமொன்று அவர்கள் பக்கமிருந்தது. அதைச்சுற்றி ஏராளமான கூட்டம் அமைதியாகச் சூழ்ந்திருந்தது. இரண்டு மூன்று தேம்பல் குரல்கள் மட்டும் கேட்டன.

“நடந்தது நடந்துவிட்டது. இனி நம்மால் ஆகக்கூடியது என்ன இருக்கிறது” என்று சர்க்கிள் இன்ஸ்பெக்டரே யாருக்கோ ஆறுதல் கூறினர். அப்போது தாழையூர்கிராமத்திற்குள்ளிருந்து ஒருவன் வேகமாக ஓடிவந்து கொண்டிருந்தான். “என்ன நடந்தது? அவர்களெல்லாம் யார்?” என்று கேட்டேன்.

“சோகக் கதையப்பா அது! பெரிய சீமான் மகள். பாழாய்ப் போன ஆண்டவன் அவளை ஊமையாகப்படைத்துவிட்டான். அவள் ஊமை யென்று கல்யாண தினத்தன்று தெரிந்து கொண்டதாலோ என்னவோ மாப்பிள்ளை ஓடிப்போய் விட்டான். அந்தப் பெண் வைரத் தூளைத்தின்று செத்துவிட்டாள். தாழையூரே தேம்பி நிற்கிறதப்பா!” என்றுன் ஓடிவந்தவன்.

இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு “கையிலென்ன காகிதப் பை” என்றேன்.

“அந்த சண்டாளனின் படம் தான் இது. இந்தப் படத்தை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பார்வைக்கு கொண்டு போகிறேன்” என்றுகூறி படத்தை என்னிடம் காட்டினுன்.

“பாவம்! நான்தான் படத்தில் இருப்பவன் என்று அந்த இருட்டில் அவனுக்கு எப்படி தெரியப் போகிறது!”

இதயத்துடி[illegible] வேகம் அதிகரித்தது[illegible]ப்புக் குழம்பில் சி[illegible]ரித்தேன். வாய் வி[illegible]. கூட்டத்திலி[illegible]ன்னை [illegible]க்கி[illegible]டும் [illegible]து.

## அவரும் நொந்துபோனர் !

“அரசியல் துறையிலிருந்து நான் வெகுதூரம் போய்க் கொண்டிருக்கிறேன். நான் அரசியலுக்கு திரும்பி வருவேன் என்று நினைக்க வில்லை.

“நான் எல்லா நிர்வாக ஸ்தானங்களிலிருந்தும் முன்னமேயே ராஜினமா செய்து விட்டேன். எந்தக் கட்சி வேலையிலும், அதிலும் முக்கியமாக தேர்தலில் சம்மந்தப் படமாட்டேன். நான் என் வாழ்க்கையை ஜீவதானம் செய்து விட்டேன்”

— ஜெயப்பிரகாஷ்




# ஊருக்கு உபதேசிகள் !

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

**"சோதிடத்தை நம்புவதா? கூடாதா?" என்று பல கேள்விகள் வந்திருக்கின்றன. நான் என்ன பதில் சொல்லுவது என்று யோசித்தேன். காந்தி என்ற ஒரு நண்பன் சொல்லிய சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது. அதுவே பதிலாகவும் இருந்தது. அதை அவனே சொல்லுகிருன், கேளுங்கள்.**

ஃ ஃ

என்னைக் கேட்டால், சோதிடர்கள் சாதாரணமானவர்கள் அல்ல; சமூகத்தில் நடமாடக் கூடாதவர்கள்! திருடர்கள் — கொலைகாரர்கள் — துரோகிகள் என்றெல்லாம் இருக்கிருர்கள் அல்லவா, அவர்களுக்குச் சமமானவர்கள். திருடர்கள் நம் பொருளை கொள்ளையடிக்கிருர்கள்; ஆனால் சோதிடர்கள் நம் மன அமைதியை கொள்ளையடிக்கிருர்கள். கொலைகாரர்கள் உயிர்களைக் கொல்லுகிருர்கள்; ஆனால் சோதிடர்களோ உயிருக்கு ஆதாரமான மன நிம்மதியையே கொன்று விடுகிருர்கள்.

ஒரு சம்பவம்.........

என் அப்பா ஒரு கோழை; பயந்தவர்; சோதிடத்தில் அபார நம்பிக்கை கொண்டவர். கண்ணால் பார்த்ததை நம்ப மாட்டார்; காதால் கேட்டதையும் நம்ப மாட்டார்; சோதிடன் சொன்னால் போதும்; அதை நம்பத் தயங்க மாட்டார். இன்னுமொன்று அவர் ஒரு மளிகைக்கடை முதலாளி!

ஒருநாள் மாலை அவர் கடையிலிருந்து வீட்டுக்கு வந்தார். அவர் முகத்தில் ஒரே சோகம். என்க்கு புதிராக இருந்தது. அவர் கையைப் பார்த்தேன். வழக்கமாக எனக்கு வரும் 'அல்வா' பொட்டணத்தையும் காணும்.

"என்னப்பா? என்ன விஷயம்?" என்று கேட்டேன். அப்பா பேசவில்லை. நான் உற்று கவனித்தேன். அவர் கண்கள் கலங்கியிருந்தன.

"ஏம்பா, ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்? உடம்புக்கு ஏதாவது... டாக்டரை அழைத்துவரட்டுமா?..., என்று இழுத்தேன்.

"அப்பா வாயைத் திறந்தார். "வேண்டாம் காந்தி! டாக்டர் வந்தாலும் இந்த ஏகாம்பரத்தைக் காப்பாற்ற முடியாது. அவன் சாவைத் தடுக்க முடியாது...', என்று சொன்னார். அவர் கண்களிலிருந்து மடமடவென்று கண்ணீர் வழிந்தது.

நான் திடுக்கிட்டேன். "என்னப்பா? என்ன சொல்லுகிறீர்கள்?" என்றேன். எனக்கு ஒரே படபடப்பு; துடி துடிப்பு!

"காந்தி! உன் அப்பா சாகப் போகிருனடா! இன்றைக்கு பத்தாவது நாள் உன் அப்பர் இருக்க மாட்டான்; அவன் பிணம்தான் இருக்கும்!...'

"ஐயோ! என்னப்பா இது? யார் சொன்னது அப்படி?"

"யார் சொல்லுவார்கள்? நடக்க இருப்பதை முன்னால் சொல்ல யாரால் முடியும்? மாடி வீட்டு மகேச ஜோசியர்தான் சொன்னர்... வியாபாரம் மந்தமாக இருக்கிறதே என்று அவரிடம் போனேன்; ஜாதகத்தைக் காட்டினேன்; நிலமையைச் சொல்லிப் புலம்பினேன்; அவர் உண்மையைச் சொல்லி விட்டார் தம்பீ!..."

"இன்னும் என்னப்பா சொன்னர்?"

"என்ன சொன்னர்? அதற்கு ஏதோ பிராயச்சித்தம் இருக்கிறதாம்; அதைச் செய்ய இரண்டாயிரம் ரூபாய் தரவேண்டுமாம்! நான் எங்கே போவேன்?" —அப்பா இப்படியெல்லாம் புலம்பினர்.

நான் யோசித்தேன். அப்பாவின் கோழைத்தனத்தைத் தெரிந்துகொண்டு பணம் பிடுங்க சதி செய்கிருன் மகேச சோதிடர் என்று புரிந்து கொண்டேன். என்ன செய்வதென்று எண்ணினேன். முடிவு ஒன்றும் செய்தேன்.

ஃ ஃ ஃ

அன்று முதல் அப்பாவுக்கு ஒரே கவலை. கடைக்குச் செல்லவில்லை; கலங்கிய கண்களுடன் படுக்கையிலேயே கிடந்தார். நாட்கள் நகர்ந்து கொண்டே சென்றன. அப்பா எண்ணிக் கொண்டே வந்தார்.

அன்று பத்தாவது நாள். பொழுது விடிந்தது. இரவு முழுதும் தூங்காத அப்பா எமனின் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்.

எமன் வரவில்லை. ஆனால் திடீரென்று ஒரு தந்தி வந்தது. நடுங்கும் கைகளுடன் அப்பா வாங்கினர். படித்தார். என் அக்காவிடமிருந்து தந்தி வந்திருந்தது. அவளது கணவனுக்கு உடம்பு சரியில்லையாம்—உடனே வர வேண்டுமாம்—இதுதான் வாசகம்.

அப்பா தந்தியைப் படித்ததும் அழ ஆரம்பித்து விட்டார். "ஐயோ! எமன் இரண்டு பேருக்கல்லவா வருகிருன்!" என்ருர்.

நான் அப்பாவை சமாதானம் செய்தேன். அவரை ஊருக்குப் புறப்படத் தூண்டினேன். நானும் கூடவே கிளம்பினேன்.

ஃ ஃ ஃ

ரயில் ஓடிக் கொண்டிருந்தது. நானும் அப்பாவும் உள்ளே இருந்தோம்.

அப்பா ஒவ்வொரு கணமும் 'எமனை' எதிர் நோக்கிக் கொண்டிருந்தார். ஆனால்? அப்பா மட்டுமல்ல; நான் மட்டுமல்ல; அந்த வண்டியில் இருந்த எவருமே எதிர்பாராத ஒரு பயங்கரச்சம்பவம் நேர்ந்துவிட்டது. ஐயோ, என்ன கோரம்! இப்போது நினைத்தாலும் என் உடல் நடுங்குகிறது.

ஓடிக் கொண்டிருந்த ரயில் வண்டி திடீரென்று ஆடியது! பெட்டிகள் கிடுகிடு வென்று கலகலத்தன! 'ஓ' என்ற அலறல்! ரயிலுக்கு விபத்து! நான் 'ஐயோ' என்று அலறினேன். அப்பா 'செத்தேன்' என்று கத்தினர்! நான் அப்பாவை இறுகக் கட்டிக் கொண்டேன். அப்புறம் நடந்தது எனக்குத் தெரியாது. நான் மயக்கமானேன்.

மீண்டும் நான் கண் விழித்த போது, அப்பாவைப் பிடித்தபடியே இருந்தேன். நாங்கள் முன்பிருந்த அதே பெட்டியில்—அதே இடத்தில்தான் இருந்தோம். அப்பாவைப் பார்த்தேன். அவரும் அப்போதுதான் கண்ணைத் திறந்தார். "காந்தி! காந்தி! பிழைத்தாயா?..." என்று புலம்பினர். இருவரும் வெளியே இறங்கினோம். வெளியே ஒரே கூட்டம்! விபத்து சிறிதுதான்; ரயிலின் இன்ஜினும், முதல் பெட்டியும்தான் கவிழ்ந்து விட்டன. நானும் அப்பாவும் கூட்டத்திற்குள் புகுந்தோம். அங்கே விபத்தில் இறந்துபோன இரண்டு மனிதர்களின் பிணங்

## சிறிய வயதிலே

### தாராளத் தம்பி

அண்ணன் முரட்டுப் பையன். ஏதோ தப்பு செய்து விட்டான். அப்பாவுக்கு அளவு கடந்த கோபம். தவறு செய்த அண்ணனுக்கு தப்பாமல் தண்டனை கொடுக்க ஆரம்பித்துவிட்டார். எப்படித் தெரியுமா? அப்பாவின் கைத்தடி அண்ணனின் உடம்பை பதம் பார்க்கத் தொடங்கிவிட்டது. அண்ணன் அழுதான்; "அய்யோ; அய்யோ" என்று அலறினன்.

பக்கத்து அறையில்படித்துக் கொண்டிருந்தான் அந்த அண்ணனின் தம்பி. அலறல் அவன் காதிலும் விழுந்தது. உடனே புத்தகத்தை வீசி எறிந்தான். அறையை விட்டு வெளியே ஓடி வந்தான். நடப்பதைப் பார்த்தான். அண்ணன் துடிதுடிப்பதைக் காண தம்பியால் சகிக்க முடியவில்லை அவன் கண்கள் கலங்கின. "வேண்டாம் அப்பா! அண்ணனை அடிக்காதீர்கள் அப்பா!" என்று கத்தினன். ஆனால், அடி ஓயவில்லை; அண்ணனின் அலறலும் நிற்கவேயில்லை.

தம்பி என்ன செய்வதென்று யோசித்தான். 'குபீர்' என்று பாய்ந்து அண்ணனை இறுகக் கட்டிக் கொண்டான். அதை எதிர்பார்த்திராத அப்பாவின் இரண்டு அடிகள் அவன் மேலேயும் விழுந்தது, அவனும் துடித்தான்.

அப்பா அடிப்பதை நிறுத்தினர். தன் சின்ன மகனை வாரி எடுத்தார். அணைத்துக் கொண்டார். ஏன் தெரியுமா? அந்த நல்ல தம்பி அவரது செல்ல மகன். அண்ணன் கஷ்டப்படுவதை காணச் சகிக்காமல் தானும் அடி வாங்க வந்தானே! பாவம், நானும் அடித்து விட்டேனே!— என்று அப்பா எண்ணினர். அண்ணனும் தப்பினன்; தம்பியை நன்றியுடன்பார்த்தான்.

இப்படி அண்ணனின் அவதியைக் கண்டு மனம் நொந்த தம்பி யார் தெரியுமா? அவன் தான் பிரெஞ்சு நாட்டின் கோடிக் கணக்கான மக்களின் துயரம் கண்டு துடிதுடித்தவன்-அவர்களின் விடுதலைக்குப் பாடுபட்டவன்-பிரஞ்சு நாட்டு பேரறிஞன்-ரூசோ.

## பெரிய மனிதர்கள்

## புதையல்......

[ 7-ம் பக்கத் தொடர்ச்சி ]

பரிமளம் பதில் பேசவில்லை; நின்றாள்.

"சொல்றீயா இல்லையா?" என்று அருகே நெருங்கினார் அம்பலம். அப்போது திடுதிடு வென்று அவரது ஆட்கள் சிலர் மேலே ஓடிவந்து, எஜமான் எஜமான்!' என்றனர். "என்னடா?" என்று அதட்டினார் அம்பலம்—

"இரண்டு தோணிகள் கரை நோக்கி வருதுங்க!"

"ஆங் — சரி — நீங்க போயி கவனிங்க; இதோ வந்துட்டேன்" - முரடர்கள் ஓடிவிட்டார்கள்.

"முடியுமா, முடியாதா பரிமளம்?" என்று மறுபடியும் அருகே நெருங்கி கூச்சலிட்டார் அம்பலம். அவருக்கு இப்போது அவசரம் வேறு; தோணிகளிலே வருகிறவர்கள் கண்களிலேசிக்கி விடக்கூடாதே என்று! அந்தத் தோணியிலேதான் தன்னுடைய துரை வருகிறான் என்று பரிமளாவுக்குத் தெரியாது. அலைகளைக்கிழித்துக் கொண்டு தோணிகள் கரை நோக்கி வருவதை சாளரத்தின் வழியாக அம்பலமும் ஒரு முறை பார்த்தார்.

"உம்—இப்போது சொல்லப் போகிறாயா? இல்லை – கஷ்டப் படப்போகிறாயா?" என்று பயங்கரமாக கத்திக் குதித்தார் அம்பலம்.

பரிமளாவின் முகக்குறி, அவள் ஏதோ ஒரு பொய் சொல்லப் போகிறாள் என்பதை உணர்த்தியது. கனைத்துக் கொண்டாள்.

"உம் — நல்ல பெண்ணுல்ல சொல்லு!" என வாய்பிளந்து நின்றார் அம்பலம். அவன் பெயர் தெரிந்துவிட்டால், அவனைப் பிடித்து — அவன் மூலம் "தங்கத்தைப் புதைத்த இடம் எது" எனத் தெரிந்து கொள்ளலாம் என துடித்தார். தங்கத்தைத் தோண்ட எண்ணிய ஐயப்பன் கடலிலே கைதியாக வந்து கொண்டிருக்கிறான், இங்கே அம்பலம் ஆலாய்ப்பறக்கிறார்!

"சொல்லும்மா!"

"சொல்லுகிறேன்"

"சொல்லு!"

"சொன்னால் அவருக்கு ஒன்றும் ஆபத்து வராதே!"

"வரவே வராது!" என்று கூறிக் கொண்டே அம்பலம் கடலை ஒரு முறை பார்த்துக் கொண்டார். தோணிகள் வேகமாக வந்து கொண்டிருந்தன,

[ வளரும் ]

★★★★★★★★★★★★★★

உயரிய முறையில்-புதிய உருவில்

சினிமா, நாடக, நாட்டிய, சங்கீத, ரேடியோ, செய்திகள், விமர்சனங்கள், சித்திரங்கள் நிறைந்தது

**கலாநிதி**

(கலைத்துறை வார இதழ்)

விலை 2-அணு

வருஷ சந்தா ரூ. 6.

விற்பனை ஏஜண்டுகள் தேவை.

77, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு சென்னை–2

★★★★★★★★★★★★★★

## கொள்கை வளருது கோபுரம் போலே!

★

**வண்ணை-சென்னை**

தேதி : 16—10—54

பேசுபவர்

அறிஞர் அண்ணா

[தியாகராயர் கல்லூரி — நாடகத்திற்கு தலைமை]

**இராயபுரம் சென்னை**

தேதி : 17—10—54

பேசுபவர்

அறிஞர் அண்ணா

**கும்பகோணம்**

தேதி : 17—10—54

பேசுவோர்

மு. கருணாநிதி,
எஸ். எஸ். ராஜேந்திரன்,
டி. வி. நாராயணசாமி.

**தூஸா சென்னை**

தேதி : 17—10—54

பேசுவோர்

ஏ. வி. பி. ஆசைத்தம்பி
எஸ். எஸ். தென்னரசு
ஏ. கே. வில்வம்
ராஜரத்தினம்

**புதுக்கோட்டை**

தேதி : 17—10—54

பேசுபவர்

முகவை.ஆர்.எஸ்.பாண்டியன்.

**செம்பியம்**

தேதி : 18—10—54

பேசுபவர் :

அறிஞர் அண்ணா

## 'தம்பி'

16—10—54 முதல் புதிய பகுதிகளுடனும் தில்லை-வில்லாளனின் **காலச் சக்கரம்** எனும் தொடர் கதையுடனும் வருகிறது.

## இலங்கைத் தரணியிலே இலட்சியக் காளை

திராவிட முன்னேற்றக் கழகத் துணைச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்யும் பொருட்டு 14-10-54 வியாழனன்று காலை விமான மூலம் சென்னை மீனம்பாக்கம் விமானக் கூடத்திலிருந்து புறப்படுகிறார். 15, 16, 17 ஆகிய தேதிகளில் கொழும்பு தமிழ் சங்க ஆண்டு விழாவில் கலந்து கொள்வார். அவருடைய சொற்பொழிவுகள் இலங்கை வானொலி நிலையத்தின் மூலம் ஒலிபரப்பப்படும். பின்னர் கண்டி பல்கலைக் கழகத்திலும். யாழ்ப்பான பகுதிகளிலும், கொழும்பு கழகப் பொதுக் கூட்டங்களிலும் பேசிவிட்டு 26-10-54 ல் சென்னை திரும்புவார்.

## ஆயின் விற்கிறார்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

சங்கத்தில் ஆச்சாரியார் அந்த உண்மையையும் கக்கிவிட்டார் அதையும் இதோ தருகிறோம்.

"சமீபத்தில் ஜனங்கள் மனசில் ஏதோ குழப்பம் ஏற்பட்டு, தெய்வ நம்பிக்கை வளர்வது தடைப்பட்டது. கல்வி பரவியதால் படித்த சிலர் மனதில் சந்தேகங்கள் ஏற்பட்டன, படித்தவர்கள் சந்தேகப்பட ஆரம்பித்ததால் அதற்கு ஓரளவு மதிப்பும் ஏற்பட்டது. ஆனல் கடவுளருளால் இந்தக் கல்வி நாட்டில் அதிகம் பரவவில்லை."

செக்கு சுற்றும் மாடுகளாய் மைளடீகபுரியை வலம் வந்தோரின் கண் திறந்துவிட்ட கல்வி முறை, நாட்டில் சரியாகப் பரவாதது குறித்து சந்தோஷப்படுகிறார் சக்கரவர்த்தியார்! காந்தியாரைச் சுட்டு வீழ்த்தி கற்கண்டு வழங்கிய இனத்தவர் தான் இப்போது தற்குறிகள் நாட்டிலே பெருகுவது கண்டு பேருவகை கொள்கின்றார்!

வேதனை! வேதனை!! திமிரோடு சொல்லியிருக்கிறார், ஆச்சாரியார்! நெல்லில் பதராய் ஆகிவிட்ட சில விபீஷணர்கள் அவரது பேச்சு கேட்டு தலை அசைக்கின்றனர், ஆமோதிக்கும் தோரணையில்!

ஒரு மாபெரும் சமுதாயத்தின் மீது ஒரு பொம்மை மனிதர் மண் அள்ளி வீசுகிறார்— இந்த வெட்கக் கேட்டை இந்த நாடு தான் இன்னும் தடுக்காமல் அனுமதித்துகொண்டிருக்கிறது.

**முரசொலி**

**உள் நாடு**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா ரூ. | 6–0–0 |
| ஆறு மாத சந்தா ரூ. | 3–8–0 |
| தனி இதழ் | 0-2-0 |

**வெளி நாடு**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா ரூ. | 6-0-0 |
| ஆறு மாத சந்தா ரூ. | 3-8-0 |
| தனி இதழ் | 0–2-0 |

ஆறு மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

நிர்வாகி

## குறள் நெறி விழா

நுங்கம்பாக்கத்தில், அக்டோபர் திங்கள் 3–8 நாட்களில் நடைபெற இருந்த குறள்நெறி விழா 23, 24, 25, 26, 27, தேதிகளில் நடைபெறும். முதல் நாளன்று மாபெரும் ஊர்வலமும், நாள்தோறும் தென்னாட்டு தமிழ்ப் புலவர்கள், மக்கள் தலைவர்களின் சொற்பொழிவுகள், இன்னிசை அரங்கு, ஓரங்க நாடகம் முதலியனவும் நடைபெறும். இந்த விழாவில் அறிஞர் அண்ணாவும், கழக முன்னணி வீரர்களும் கலந்து கொள்ளுகிறார்கள்.

## பிறைவானம்...

[ 9-ம் பக்க தொடர்ச்சி ]

கள் இடத்தப்பட்டிருந்தன. அப்பா அந்தப் பிணங்களைப் பார்த்தார். மறுகணம் "ஆ" என்று வீறிட்டு அலறினார். நான் பயந்தேன். பிணங்களை உற்றுப் பார்த்தேன். என்ன அது? நானும் திடுக்கிட்டேன்! ஏன் தெரியுமா? அந்த இரட்டைப் பிணங்களில் ஒன்று மகேச சோதிடருடையதுதான்!

"அப்பா! பார்த்தீர்களா சோதிடருக்கு நேர்ந்த கதியை! தனக்கு வரும் சாவையே தெரிந்துகொள்ள முடியாத அவர், உங்களை பயமுறுத்தி விட்டாரே!" என்றேன்.

அப்பா சற்றுநேரம் பேசாமல் நின்றார். திடீரென்று "இப்போது எப்படி நாம் ஊருக்குச் செல்வது? உன் அத்தானுக்கு எப்படி இருக்கிறதோ உடம்புக்கு?" என்றார்.

"உடம்பெல்லாம் நன்றாகத் தான் இருக்கும். அந்தத் தந்தியை நான்தாம்பா கொடுக்கச் செய்தேன். வெளியூர் பயணம் சென்றால், நீங்கள் மரண பயத்தை மறப்பீர்கள் என்று இந்த ஏற்பாடு செய்தேன்... ஆனல்...முடிவு வேறுவிதமாக' என்று இழுத்தேன்.

இன்னும் வளர்ப்பானேன்? அன்று முதல் என் அப்பா 'சோதிட விரோதி'யாக மாறி விட்டார்.

ஃ ஃ ஃ

இப்போது பதில் கிடைத்து விட்டது; போதுமல்லவா? இனி நீங்களும் சோதிட விரோதிகள்தானே?

—சொர்ணம்

★★★★★★★★★★★★★

**" கிளர்ச்சி "**

15-10-54-ம் தேதி இதழிலிருந்து

"கடவுளைத் தேடிய கருப்புப் பெண்ணின் அனுபவங்கள்"

தொடர்கிறது

பெர்னுட்ஷாவின் ஆழ்ந்த கருத்துக்கள்!

கிண்டல்கள்! நகைச்சுவைகள்!

கடவுளைப் பற்றிய தர்க்கரீதியான வாதங்கள்!

படிக்கத் தவறுதீர்கள்

● **கிளர்ச்சி** ●

திருமங்கலம்-மதுரை மாவட்டம்

★★★★★★★★★★★★




# (19) புது வெள்ளம்

அவள் ஒரு நாட்டிய நங்கை —கலாராணி. நெளிந்தாடும் அவளது பட்டுப் பாதங்கள் பல்லாயிரம் நளின கதைகளைச் சொல்லும்! உள்ளத்தை ஊடுருவித் துளைக்கும் அவளது உருளும் கருவிழிகள்! அவளது உதட்டசைவிலே உலகத்தைக் கண்டு கொண்டிருந்தவர்கள் ஏராளம்! அவள் ஒரு அழகுப் பெட்டகம்!

அந்த ஆடிவரும் பெண் விளக்கை தங்கள் வாழ்வின் ஜோதியாக்க — பூத்துக் குலுங்கும் புது மலரை கொய்து விட துடிதுடிக்கும் நெஞ்சத்தினர் பலர் இருக்க, அந்தப் புதுமலர் ஒரு சுவைக்கத் தெரியாத வண்டை நாடுகிறது. "ஆண்டவன் ஒரு நாள் நம்மிடையே வருவான்; அந்தப் பரமபிதாவின் பாதச்சுவடுகள் படும் இடமெல்லாம் பாபம் அழியும்; தீமை சாகும்" என்று வரட்டுவாதம் புரிந்து கொண்டிருந்த வேதாந்தி அவன். ஆனாலும் அவன் வெறுத்தான் அந்த விழி நிறை அழகுருவை அவள் கெஞ்சினாள்; அவன் வெகுண்டான். முத்தமிட துடிதுடித்தன அவளது பஞ்சு அதரங்கள் அவை விஷம் தோய்ந்த கூர்வாள் என்றான் அவன். காதலில் சாயல் கலந்த பெருமூச்சுகளை விட்டழுதாள். அவனோ விஷமூச்சு என்று விளக்கம் தந்தான். அவள் கோபக்குளமானாள். உள்ளத்திலே கிளர்ச்சியைத் தூண்டிவிட்ட காமவெறி, அந்தப் புதும்லரை நாகமாக மாற்றி விட்டது. சீறி எழுந்தாள் அந்த சிங்காரப் பதுமை! "நாடி வந்தேன்; நச்சுப் பாம்பென்றாய்! புது சுகம் தேடி வந்த என்னை புறக்கணித்தாய்; பாரடா பார்! என் நெஞ்சத்திலே காமக்கணைத் தொடுத்து விட்ட உன் செவ்வுதடுகளை சுவைக்காமல் விடேன், நான்" என்று வெஞ்சினம் பேசினாள். விஷச் சபதம் ஏற்றாள்.

அதன் முடிவு?... பாபக்கறை தீட்டி அந்த அழகுப் பாவை, தனது பேராவலைத் தணித்துக் கொள்கிறாள்! துண்டாடப் பட்டுவிடுகிறது அந்த வாலிப வேதாந்தியின் சிரம். அந்தச் சவத்தின் உதடுகளை — வெறி கலந்த பேய்ச் சிரிப்பு பின்னிசைக்க முத்தமிட்டு வீசி எறிகிறாள் அந்த சபதமேற்ற நங்கை!—

இப்படி ஒரு நவீனம்! வெறி பிடித்த பெண்ணழகியாம் சலோமி என்பாளின் கதை சொல்லும் புதுமைக் காவியம்!

உடல் இச்சை நீதிக்கு அஞ்சாது — நேர்மையைத் தேடாது—பாபத்தின் எல்லை என்றாலும் பாரது—என்று பொருள்படும் இந்தக் காவியத்தைத் தீட்டியிருக்கிறான் ஒரு ஆங்கில நாட்டு கவிதை மன்னன். இத்தகைய உணர்ச்சி எழுத்துக்களைப் படைத்த அந்த மேதையின் வாழ்வேடுகளைப் புரட்டினால், அவனது வாலிப காலத்திய அனுபவங்கள்—"மங்கை இன்பம்தான் மாளா சுகம்" என்ற வாதத்தை மெய்ப்பிக்கும் ருசிகரச் சம்பவங்கள் பல காணக்கிடக்கின்றன. உண்மைதான்; அந்த காதல் கவிஞனும் — காவியப் பெரும் பித்தனும் — ஆஸ்கார் ஒயில்டின் உண்மைச் சொரூபம், ஒரு இலக்கிய வெறியனாக மட்டுமல்ல; காமவெறியனாகவும் புலப்படுகிறது.

* * *

தந்தை திறமை மிகுந்த மருத்துவர்; தாயார் ஓரளவு எழுதும் தேர்ச்சி பெற்ற அரசியல் விமர்சகர்! அத்தகையோருக்கு பிறந்த அவன், இலக்கிய வானிலே தனக்கென தனி ஒளி வீசக் கூடியவனாக வளர்ந்ததில் வியப்பில்லை! ஷேக்ஸ்பியருக்கு அடுத்தபடியாக ஆங்கில மாதா பெற்றெடுத்த உயிர் கவிஞன் என்று அவனை உலகம் போற்றுவதிலும் புதுமையில்லை!

கலைக்கு மதிப்பு தரத்தான் வேண்டும் என்பதை உணர்ந்து, அந்த எண்ணத்தை ஓரளவு செயலிலும் காட்டிய விக்டோரியா மகாராணியாரின் ஆட்சிக் காலம் அது. இலக்கியத்தை ரசிக்கத்தான் வேண்டும். என்ற மனம் இட்ட புதுக்கட்டளைக்கு மக்கள் கீழ்ப் படிந்து கிடந்த சமயம். ஆகவே, அன்று தேவைக்குக் குறைவாகத்தான் கலைஞர்கள் தோன்றியிருக்கிறார்கள். அந்த நிலையில் இலக்கிய உலகில் வாழ வந்த ஒயில்டுக்கு வரவேற்பு மிகுந்திருந்தது. அதன் பலனாக தனது இருபத்து எட்டாவது வயதிற்குள் அநேகமாக எல்லா ஐரோப்பிய நாடுகளாலும் அழைக்கப்பட்டான்; வாகைமாலைகள் சூடப்பட்டான்.

* * *

மனதிற்கு உணர்ச்சியூட்டும் ஏதேனும் இன்பத் தொடர்பு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டதால்தான், கலைஞர்கள் சிலரின் எழுத்துக்களில் உயிர் இருந்திருக்கிறது. அந்த மானசீகத் தொடர்பு நிலவாக இருக்கலாம், நீல வானமாக இருக்கலாம்; வண்ண மலர்க் காடாக இருக்கலாம்; வற்றாத அருவியாகவும் இருக்கலாம்.

ஆனால், ஒயில்டுக்கு எந்தத் தொடர்பும் அப்படி மானசீகமாக இருந்ததில்லை. மது ஊட்டிய போதையிலேயே மங்கையரின் இன்ப அரவணைப்பிலேயே அவனது எழுதுகோல் தன் பணியைச் செய்திருக்கிறது.



தனது களியாட்டங்களுக்கு தந்தை தடையாக இருப்பதை ஒயில்டு வெறுத்தான். ஆகவே தந்தையிட ருந்து தனக்குரிய சொத்தை பிரித்துவாங்கி தனி இடத்தில் வாழவும் தலைப்பட்டான். அப்போது அவன் எழுதிய நாடகங்கள் மேடைக்கு வரும் அரிய சந்தர்ப்பத்தைப் பெற்றன. அதே சந்தர்ப்பம் அவனுக்கு பல நடிகைகளின் தொடர்பையும் தேடித்தந்தது. எழுத்தும் பெண்மையும் அங்கே பண்டமாற்று செய்து கொள்ளப் பட்டன. ஒயில்டும் ருசிகண்ட பூனையானான்.

ஒயில்டின் எழுத்துக்களிலே மயங்கிய பெண்மணிகள், அவனது அழகுஉருவிலும் மயங்கத்தான் செய்தார்கள். கண்ட கண்ட பெண்களையெல்லாம் ஒயில்டின் வன்மை மிகுந்த நாக்கு வர்ணித்துக் கொண்டேயிருக்குமாம். அந்த வார்த்தைகளின் போதையிலே சிக்கிய அவர்கள், நடப்பதை உணரும் சக்தியற்றவர்களாய் அவன் கரங்களிலே சிக்கி விடுவார்களாம். அத்தகைய லீலா விநோதங்களினூடேதான் அவனது இன்பரசம் பொங்கும் எழுத்துக்களும் பிறந்திருக்கின்றன.

ஆனால் ஒயில்டின் இலக்கிய வாழ்வுக் காலத்தின் கடைசி கட்டத்தில்தான் 'சிரஞ்சீவி'த் தனம் பெற்ற அழகோவியங்கள் தோன்றியிருக்கின்றன. ஏனெனில் அப்போதுதான் அவனது இன்ப அனுபவத்திலும் ஒரு புது திருப்பம் ஏற்பட்டது. எத்தத்தனையோ அழகு ராணிகளைச் சுவைத்துப் பார்த்த ஒயில்டின் பாசப்பிணைப்பிலே அப்போது ஒரு ஆணழகன் சிக்கினான்!

"எழுதுகோலை கையிலெடுக்கிறேன்; எழுத மறுக்கிறது என் கரம்! 'எங்கே! எங்கே!' என்று சுற்றிச் சுழலுகிறது என் பசி பிடித்த கண்கள். என் அமுதமே! உன்னைக் காணவிட்டால் என் எழுத்துக்களை காணோம்; அவைகளுக்கு உயிரைக் காணோம்! நெஞ்சத்தில் பதிந்து விட்ட சித்திரமே உன் முத்துப்பல் வரிசைகண்டால் என் கற்பனையில் எத்தத்தனையோ சத்தான கருத்துக்கள்! மலர்க் கொடியே! வளைந்து நெளியும் உன் வில் புருவம் தான் என் மனதிலே கூனிக்கிடக்கும் கவிதா தன்மையைத் தட்டி எழுப்புகிறது! தோகை மயிலே! உன் மதிவதனம்தான் என் கவிதைகளின் திறவுகோல்! நீ இல்லை என்றால் நான் இல்லை! என் கவிதை இல்லை!"

இப்படி எல்லாம் பித்தனைப் போல ஒயில்ட் வர்ணிக்கிறான், அந்த ஆண் மகனை – அவனது புதுக் 'காதலி'யை – டக்ளஸ் என்ற இருபத்தோரு வயது நிரம்பாத அழகான வாலிபனை!

அந்த இருவருக்குமிடையே பின்னிக்கிடந்த தொடர்பு ஊராரின் கண்களுக்குள் சந்தேகத்தைப் பாய்ச்சியது. அடுத்தபடியாக வாய் தன் கடமையைச் செய்தது. டக்ளசுக்கும் ஒயில்டுக்குமிடையே நடக்கும் காதல் கேளிக்கைகளை—உடலின்பத்தை கதை கதையாகச் சொன்னது. அதைக் கேள்விப்பட்ட டக்ளசின் தந்தை சீறினார். "மதிப்பு மிக்க குடும்பத்தின் மகிமையைக் கெடுத்துவிட்டான்; என் மகனை வலைவீசி பிடித்தான்; அவனைக் கெடுத்தான்" என்று கத்தினார். கண்ட கண்ட இடமெல்லாம் தூற்றினார்.

உண்மையை மறைக்கக் கருதிய ஒயில்ட் அந்தத் தந்தையை வழக்கு மன்றம் அழைத்தான், ஆனால் ஒயில்டின் கேவலமான நடத்தையை உலகத்திற்கு பறை சாற்றிவிட்டது அந்த வழக்கு! வழ்க்கின் முடிவு ஒயில்டை குற்றவாளிதான் என்பதை ஒப்புக். கொண்டது. இரண்டாண்டு வெஞ்சிறைவாசத்தையும் தந்தது. அவனது சிறைவாசத்தின்போது ஒயில்டின் மாளிகையிலிருந்து கையெழுத்துப் பிரதிகள் பல கைப்பற்றப்பட்டன. விற்பனையும் செய்யப்பட்டனவாம்!

ஒயில்டின் வாழ்வின் இருண்ட அந்த இரண்டாண்டுகள் கடந்தபின் அவன் விடுதலையானான். ஆனால் அந்த இலக்கிய மேதையை ஆங்கில நாடு மீண்டும் வரவேற்கவில்லை. அவனது நாடகங்கள் நிறுத்தப்பட்டன; பத்திரிகைகள் கிண்டல் பாணங்களை தொடுத்தன; நண்பர்களின் பார்வை கிடைக்கவில்லை; மனைவியின் அன்பழைப்பும் அவனை நாடவில்லை!

அனாதைபோல அலைந்து கொண்டிருந்த ஒயில்டின் உள்ளத்தில் ஓரே வேதனைச் சுமை.. தாயகத்தின் புறக்கணிப்பு அவனை நாட்டைவிட்டே துரத்தியது. அவமானம் தாங்கமுடியாத அவன் பிரான்சுக்கு ஓடினான்.. மாற்றுப் பெயர் பூண்டு தன் எஞ்சிய வாழ் நாட்களை கழித்தான்; அங்கேயே மடிந்தான்!

இலக்கிய உலகத்தில் தனிப் பாதையில் நடந்து, புதுமுறை வசன காவியத்தைக் கையாண்டு, அவன் தீட்டிய காவியச் செல்வங்கள் இன்று உலகத்தின் புகழ்ச்சிக்குப் பாத்திரமாக இருக்கின்றன; அவனது நடத்தைகள் அந்தப் புகழிலே சிறு கீறலை உண்டுபண்ணிய போதிலும்!

# கடைசிப்பக்கம்

எஸ். பி. சின்னத்தம்பி-கொழும்பு.

(?) கம்யூனிஸ்டுக் கட்சியினர் எத்தனை வகை பத்திரிகைகள் நடத்துகிறார்கள்?

*திட்டம் தருவதாகக் கூறிக் கொண்டு ஒருவகைப் பத்திரிகையும்—திட்டுவதற்காகவே ஒரு வகைப் பத்திரிகையும்-அவர்களால் நடத்தப்படுகின்றன.*

வீரன்—விருதுநகர்.

(?) சாய்ந்துபோன சர்வாதிகாரிகள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

*சிலர் 'அண்டர் கிரவுண்ட்'டில் இருக்கிறார்கள். இன்னும் சிலர் தட்டிக் கேட்க ஆள் இல்லை என்ற தைரியத்தில் மனம் போனபடி மக்களை மதவெறிப் பாதைக்கு இழுத்துச் செல்லும் தனியாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.*

வி. கே. சந்திரமோகனன் பெங்களூர்.

(?) ராமாயணத்தை மாற்றி நடத்துகிறார்கள் என்று ஆச்சாரியார்போடும் கூச்சலில் அர்த்தம் இருக்கிறதா?

*வால்மீகி ராமாயணத்தை மாற்றி எழுதினான் கம்பன் என்று ஒப்புக்கொள்கிற ஆச்சாரியார்; இப்போது ஏற்படுகிற மாற்றங்களைக்கண்டு ஏன் அலற வேண்டும்?*

கந்தசாமிக்கோனார்-அரக்கோணம்

(?) அய்யா நாஸ்திக எழுத்தாணியாரே! நீர் திறமைசாலியானால் ராமாயணத்திலே ஒரு புதிய மாற்றம் சொல்லுமே பார்ப்போம்-முடியுமா? சாமர்த்தியமுண்டா?

*ஆஸ்திகக்கோனார் அவர்களே! மாற்றத்தைக் கேளும்-*

*ராமாயணயுத்தத்தில்ராவணன் சாகவில்லை — தோற்கவுமில்லை. சூர்ப்பனகையின் மூக்கை அறுத்தமைக்காக ராமன் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, சீதையைத் திரும்பப் பெற்றுக் கொண்டு சமாதானம் செய்து கொண்டான். தான் முடிசூட முடியவில்லையே என்று எண்ணிய விபீஷணன், சில சதிகாரர்களை சேர்த்துக்கொண்டு, இராவணுதியர் தூங்கும்போது அவர்களை அடியோடு கொன்றுவிட்டு, தான் மகுடம் தாங்கினான். போதுமா மாற்றம்-இன்னும் தேவையா?*

என். சம்பந்தம்—சென்னை-1

(?) மண்குடிசையென்றும் மாளிகையென்றும் வித்யாசம் பாராதது காதல் என்றுவர்ணிக்கும் நீங்கள்; அந்தக் காதலை ஒரு குழப்பம் என்று முரசொலியில் எழுதினீர்களே; அது எப்படிப் பொருந்தும்?

*குழப்பம்கூட மண்குடிசை மாளிகை என்று வித்தியாசம் பாராமல் வரக்கூடியதுதான் தோழரே!*

எம். எஸ். பழனி கல்லிடைக்குறிச்சி.

(?) கடவுள் வாழ்த்து--வான் சிறப்பு—நீத்தார் பெருமை எல்லாவற்றையும் கடந்து, குறளில் காமத்துப் பாலுக்கு மட்டும் 'குறளோவியம்' தீட்டுவதேன்? மற்ற அதிகாரங்களுக்கு விளக்கம்தரத் தயங்குவதேன்?

*"குறளோவியம் இத்துடன் முடிந்துவிட்டது" என்று முரசொலியில் அறிவிப்பு வந்தபிறகல்லவா நீர் இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்.*

'அசோக்'—மாயவரம்,

(?) தி. மு. கழகத்தை குறை கூறியவர்கள், மீண்டும் தி. மு. கழகத்திற்கு வந்தால் சேர்த்துக் கொள்ளலாமா?

*சுயலாபங் கருதி வந்தால் நிச்சயம் சேர்த்துக் கொள்ளக் கூடாததான் — கொள்கையின் உண்மையைப் புரிந்துகொண்டு வருகிறவர்களைத் தடுப்பது சரியல்லவே-வெளியே இருந்து வசைபாடியவர்களும் இங்கே வருகிறார்கள்: இங்கிருந்தும் வெளியே சென்று வசை பாடுகிறார்கள். அத்தகைய வெளவால்கள் எந்தக் கட்சியிலும் இருக்கக் கூடாதுதான்!*

*ஆனாலும் காங்கிரசிலிருந்து வெளியேறிய ராஜாசிதம்பரத்திற்கும், ராமசாமி பெரியாருக்கும் எவ்வளவு வித்தியாச மிருக்கிறது?*

சாமிநாதன் — திருவள்ளூர்.

(?) அம்மையப்பன் படத்தில் சென்சார் வெட்டியது எவ்வளவு?

*நாகூர் அனிபாவின் பாட்டு, சாமியார் போர்ப் பிரச்சாரம் செய்யும் ஒரு முழுக்காட்சி, அடிமைச் சின்னத்தை சுமக்க வைத்து முத்தனை இழுத்துச் செல்லும் ஒரு முழுக்காட்சி— இவை உட்பட மொத்தம் ஆயிரத்து நானூறு அடிகள் வெட்டப் பட்டதாகத் தெரிகிறது.*

'ஒரு ஏழை' — சிலோன்.

(?) ஏழையின் கண்ணீர் யாருக்கு சொந்தம்?

*ஏழைக்குத்தான் சொந்தம். அந்த வற்றாத ஜீவநதியை வளைத்துக் கொள்ள இன்றும் எந்த வல்லரசும் முயலவில்லை.*

பி. திருமூர்த்தி—விழுப்புரம்.

(?) திராவிடம் என்பது தமிழா?

*ஆமாம்! திருஇடம் என்பதே திராவிடம் ஆயிற்று!*

சு. முதல்வன். விரவநல்லூர்.

(?) 'பொதுவுடைமைக்காரர்கள் மதத்தையும் பூணூலையும் நம்புவதில்லை. மதமும், கடவுளும் பொதுவுடைமைக் கொள்கை விரோதிகளின் மிகப் பயங்கரமான ஆயுதம்' -என்று பிரபல பொதுவுடைமைவாதி பேராசிரியர் இராகுல சாங்கிருத்தியாயன், 'பொதுவுடைமைதான் என்ன?' என்ற நூலில் கூறுகிறாரே; அப்படியிருக்க இங்குள்ள ஜீவானந்த பாகவதர்கள் இராமயணத்தைத் தோள் மீது தூக்கித் திரிவதேன்?

*இராகுல சாங்கிருத்தியாயன் என்ன, மார்க்சும், மாலென்கோவுமே நேராகவந்து முறையிட்டால்கூட ஆச்சாரியாரிடம் கம்யூனிஸ்ட் கட்சி செய்துகொண்ட உடன்படிக்கையின்படி 'ஜீவானந்தங்கள்' சத்காலட்சேபத்தை நடத்திக் கொண்டுதான் இருப்பார்கள்!*

வேணுகோபாலன்—ராயபுரம்.

(?) ராஜாஜீயின் அந்திய கால மேன்மைக்கு ஒரு உதாரணம் தருக.

*அவர் கிருபானந்தவாரியின் நண்பர் என்பதுதான்.*

"உண்மை விளம்பி"—நாகை.

(?) தஞ்சை மாவட்டம், கீவளூர் பகுதியில் திராவிட கழகத்தினர் ஜில்லா போர்டு தேர்தலில் ஒரு அய்யரை பகிரங்கமாக ஆதரித்தார்களே; அதுவும் "பார்ப்பானே வெளியேறு!" என்ற தத்துவத்தின் அடிப்படை தானா?

*ஆமாம்! "பார்ப்பானே! நீ கீவளூரை விட்டு வெளியேறி— ஜில்லா போர்டுக்கு ஓடு!" என்ற தத்துவத்தின் அடிப்படை அது*


விற்பனையாகிறது

மு. க. தீட்டிய

**அம்மையப்பன்**

[ கதை வசனப் புத்தகம் ]

விலை 8 அணா

**மனோகரா**

[ புதிய பதிப்பு ]

விலை 8 அணா

விற்பனைக் கழிவு 40 சதவிகிதம்

தயாராகிறது!

கருணாநிதி எழுதிய

**நளாயினி**

— விபரங்கட்கு —

முத்தாரம் பதிப்பகம்

சென்னை-14,


மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்படுகிறது.
அலுவலகம் : 6, எஸ். பி. சன்னதி தெரு, ராயப்பேட்டை, சென்னை—1